பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 26 புதன்கிழமை (09-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:64

### அரசமைப்பு சீர்திருத்த யோசனை

# பிராந்தியசபைகள், பல்லினக்கோட்பாடு; இரண்டிலும் அரசு - தமிழ்கட்சிகள் இணக்கம்

## மீண்டும் நாளை சந்திப்பு

கொழும்பு,பெப்ரவரி 9

**அரசமைப்புச் சீர்திருத்த யோசனை தொடர்பாக தமிழ்க்கட்சிகளுடன் இணக்கம் காண்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று நடைபெற்றது.**

**அரசின் யோசனைகளில் ஆறு அம்சங்கள் நேற்று ஆராயப்பட்டன. அவற்றில் பிராந்திய சபைகள், பல்லினக் கோட்பாடு ஆகிய இரு விடயங்களில் மட்டுமே இணக்கநிலை எட்டப்பட்டதாக தமிழ்க்கட்சி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.**

பிரிக்கமுடியாத பிராந்தியங்களின் கூட்டமைப்பு, பல்லின, பல்மத மக்கள் வாழும் நாடு என்ற கோட்பாடு, யாப்பு முன்னுரை, கொழும்பு நகரின் சுயாதிபத்தியம், அடிப்படை உரிமைகள், தேர்தல் ஆணையாளர், முதலமைச்சர் நியமனம் ஆகிய விடயங்கள் தொடர்பாக நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்

கொழும்பு,பெப். 9

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் கட்டணங்கள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் 15சதவீதத்தால் அதிகரிக்கப்படவிருப்பதாக போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

டீஸலின் விலை ஒரு லீற்றருக்கு 23 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் -

இதன் காரணமாக பஸ் கட்டணத்தை 15 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டியுள்ளது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

தனியார் பஸ் கட்டணங்கள் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கட்டணங்கள் உடனடியாக அதிகரிக்கப்படமாட்டா என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-3-7)

### பிந்திய செய்தி

## நேற்றிரவு பஸ்களில் குண்டுகள் வெடிப்பு!

கொழும்பு,பெப்.9

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்திலும், ஜா-எலவிலும் நேற்றிரவு 10.45 மணியளவில் ஒரே சமயத்தில் இரு பஸ்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஒருவர் உயிரிழந்தார்.

புறக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து வெலிமடை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த பஸ்ஸில் வெடித்த குண்டினால் ஒருவர் பலியானார். 20 பயணிகள் காயமடைந்தனர்.

பஸ்ஸினுள் ஏறிய சிறுவன

(12ஆம் பக்கம் பார்க்க)

## நேரியகுளத்தில் டிரக் மீது கிளைமோர் தாக்குதல்!

### 3 படையினர் பலி! 11 பேர் காயம்!!

வவுனியா,பெப்.9

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த படையினரின் 'டிரக்' ஒன்று நேற்றுக்காலை பதினொரு மணியளவில் நேரியகுளம் என்னும் இடத்தில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தத் தாக்குதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர். பதினொரு படையினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் வவுனியா, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படையினர் பயணம் செய்த டிரக்கும் பலத்த சேதத்துக்குள்ளானது.

(ஐ-3-8-164)

## மாற்றியமைக்கப்பட்ட யோசனைகள் குறித்து தமிழ்க்கட்சிகள் அதிருப்தி!

கொழும்பு,பெப்.9

மாற்றியமைக்கப்பட்ட அரசமைப்புச் சம்பந்தமான புதிய யோசனைகள் குறித்து தமிழ்க் கட்சிகள் அதிருப்தியும் ஏமாற்றமும் தெரிவித்தன.

1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளில் பல மாற்றியமைக்கப்பட்ட புதிய யோசனைகளில் இல்லை அதிகாரங்கள் பலவும் குறைக்கப்பட்டே புதிய யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தமிழ் அரசியல் கட்சிகள் நேற்றிரவு தெரிவித்தன.

தமிழ்க் கட்சி வட்டாரங்கள் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

1997 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நகலில் தெரிவிக்கப்பட்டிருந்த நல்ல பல ஆலோசனைகள் புதிய நகலில் இல்லை. பெரும்பாலான விடயங்களில் தரப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் மேலும் முன்னேற்றம் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்தது. நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடலில் தாக்குதல்; 2 மீனவரைக் காணவில்லை!

வவுனியா,பெப்.9

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் பல சேதமடைந்ததுடன் இரு மீனவர்கள் காணாமற்போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாலையில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இரவு எட்டு மணியளவில் தாக்குதலுக்கு இலக்காகியதாக வவனித் தகவல்கள் தெரிவித்தன. தாக்குதலுக்கு இலக்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அரசுப் பிரதிநிதிகள் பாலசிங்கத்தைச் சந்தித்தனர்?

லண்டன்,பெப்.9

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வகையில் முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசுப்பிரதிநிதிகள், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்துடன் கலந்துரையாடியுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தப்பேச்சுக்கள் எங்கு, எப்போது நடந்தன என்பது குறித்து எந்தத் தகவல்களும் வெளிவரவில்லை.

இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்பான விவரங்களை வெளியிட கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## நோர்வே அமைச்சரின் வருகை பற்றி முடிவில்லை

### அந்நாட்டுத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.9

நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வெலோபென் இலங்கை வருவதற்கான முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு வருவதற்கு அவர் முன்னர் திட்டமிட்ட வேளையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாட்டில் இல்லாததால் விஜயம் ஒத்திவைக்கப்பட்டது என்றும் -

மீண்டும் இலங்கைக்கு வருவது தொடர்பாக இதுவரை எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை, திகதியும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும்-

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவ்வாரம் அவர் கொழும்பு வருவார் என்று கொழும்பில் வெளியான தகவல்களில் உண்மை இல்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக மூவர் கைது

கொழும்பு,பெப்.9

மொனராகல, பிபிலை ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக தமிழர் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறைவலாப்பிட்டிய சோதனை நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் -

அதன் பின்னர் மற்றுமிருவர் கைது செய்யப்பட்டதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை கைதான இருவர் தொடர்பான விவரங்கள் எதனையும் பொலீஸார் வெளியிடவில்லை.

## ஈ.பி.டி.பியில் இருந்து தப்பி செஞ்சிலுவைக் குழுவிடம் சரண்!

### இரு இளைஞர்கள் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,பெப்.9

ஈ.பி.டி.பி. அமைப்பின் ஊர்காவற்றுறை முகாமில் இருந்து தப்பிய இரு உறுப்பினர்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரியால் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறையில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமில் இருந்து கடந்த 3ஆம் திகதி தப்பி ஓடிய திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் அன்ரன்தாஸ் (வயது 23), சின்னையா பாலன்(வயது 23) ஆகிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. 'பாஸ்' முறை குறித்து ஐ.தே.க. கூட்டத்தில் ஆராய்வு

### அவசரகாலச் சட்டநீடிப்பை எதிர்த்து வாக்களிக்கும்

கொழும்பு,பெப்.9

யுத்தத்தில் ஏற்பட்டுள்ள தோல்வியை மறைக்கவே மட்டக்களப்பில் பயணப் 'பாஸ்' முறையைக் கொண்டுவர அரசு முனைகின்றது என்று ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடந்த சமயம் இதுவிடயம் தொடர்பாக ஆராயப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தேவை

A. வேலைக்கள தளபாடங்கள்
1. பட்டடை (Smithy)
2. தச்சுவேலை இயந்திரம் (Carpentry mechine)
3. கம்மாலை துருத்தி (Smithy hearth)
4. தகடு மடிக்கும் உபகரணம் (Plate folder)
5. தகடு வெட்டும் உபகரணம் (Plate cutter)
6. குழாய் வளைக்கும் உபகரணம் (Pipe bender)
7. கம்பி வெட்டி (Bar cutter)

B. 1. கல் நொருக்கி (Metal crusher) 16"x10"
2. கல் நொருக்கி (Metal crusher) 10"x7"
3. டீசல் இயந்திரம் 35 H.P, 20 H.P

தொடர்பு: பொறியியலாளர்,
புனரமைப்புப் பகுதி,
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்,
No. 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/10963)
T.P- 2239


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

10.02.2000

தோற்றம் 05 - 01 - 1919



மறைவு 11 - 01 - 2000

### அமரர் M.S.பொன்னம்பலம்

[ இளைப்பாறிய கணக்காளர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை (R.V.D.B), அம்பாறை. ]

*பிறப்பிடம் : மயிலிட்டி வீரமாணிக்கன்தேவன்துறை.*
*வதிவிடம் : நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி. (சாண்டா சந்தை வீதி)*

"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ள தூ உம் அன்று"

11.01.2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது ஐயாவின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் கடிதம், தந்தி, தொலைபேசி, இரங்கல் மடல் மூலமும் வேறு பல வழிகளிலும் உதவி செய்தும் எமது துயரத்தில் பங்குகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எமது நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி இல்லத்தில் நாளை (10.02.2000) வியாழன் அன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
P.சத்தியசீலன் (மகன்)
(73500)
மனைவி, மக்கள், மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 05 - 1934



உதிர்வு 23 - 01 - 1999

### சொக்கலிங்ககுருக்கள் நவரத்தினஐயர்

(கீரிமலை)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து வாழ்க்கையை முன்னேற்றி வைத்து எம்மை விட்டு அணைந்த எமது தந்தையை ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டு சென்றாலும் எம் நெஞ்சம் மறவாது.

ஆறுமுகம் ஒழுங்கை,
3ஆம் கட்டை,
கல்வியங்காடு.
(73480)
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமகள்.

## பல்கலை அனுமதிக்கு விண்ணப்பம்

கொழும்பு,பெப்.9

பல்கலைக்கழகங்களுக்கு 2000/2001 கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் மானிய ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான படிவங்களை ஆணைக்குழு அலுவலகத்திலோ அல்லது முகவர்களிடமோ பெற்று அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பரிசளிப்பு விழா

வலி.கிழக்கு,பெப்.9

யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு கல்லூரி வைரவிழா அரங்கில் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா கலந்து கொள்வார். கு.குமாரக்குருக்களின் ஆசியுரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ-180)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யாழ்ப்பாணம்,பெப்.9

யெகோவாவின் சாட்சிகளின் ஒரு நாள் விசேட மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

## இலவச ஆங்கில வகுப்பு

தேசிய இளைஞர் சேவை அமைப்பினால், தீவுப் பகுதி தெற்கு செயலர் பிரிவுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் இன்று மாலை 3.30மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றன. (இ-8-167)


*13. 2. 2000 அன்று நடைபெறவிருக்கும் புலமைப் பரிசில் பரீட்சை 12. 02. 2000 அன்று சனிக்கிழமை நடைபெறும்.*

BOND
யாழ்நகர். (73501)

ராஜா
யாழ்ப்பாணம்
ரசிகர்களே
அஜித் – சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள்வருவாளா?
10.30, 2.30
(C/10952)

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
விஜய், மந்த்ரா, ரகுவரன்
நடித்த
லவ் டுடே
(ரீல்ஸ்)
காட்சிகள் - 11.00,2.30
(புதியநேரம்)
(C/10946)

லிபேட்டி
அச்சுவேலி
சிவாஜி – தேவிகா
நடித்த
படித்தால் மட்டும் போதுமா?
காட்சிகள்
10.30, 2.30
T.P. No - 070-212223
070-212678
(73387)


## கண்ணீர் அஞ்சலி

### திரு.செ.கா.நந்தகுமாரன்

**தலைவர், சிவபூத நாதேஸ்வரர் தேவஸ்தானம்**
(உரும்பிராய், கரந்தன், நீர்வேலி, கோப்பாய்)

எமது ஆலயத்தின் வளர்ச்சியை மூச்சாகக்கொண்டு பணி செய்த அன்னாரது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பரிபாலன சபையினர்,*
*சிவபூத நாதேஸ்வரர் தேவஸ்தானம்,*
*உரும்பிராய்.*
(73509)

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை நந்தகுமாரன்

(இராசா)

(உரிமையாளர், மங்கை ஸ்ரோர்ஸ் கரந்தன்., தலைவர், சிவபூத நாதேஸ்வர பரிபாலன சபை, கரந்தன்.,. உறுப்பினர், அரிமாக்கழகம், உரும்பிராய்.)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நந்தகுமாரன் (5.02.2000) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் மகனும் பாலசிங்கத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற நல்லதம்பி - பரிமளம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமலரின்(குஞ்சு) அன்புக்கணவரும் கோகுலன்(கொழும்பு), குகதாசன்(லண்டன்) குலமங்கை, சுகாசினி(யா/வேம்படி மகளிர் கல்லூரி), தர்சனா(வசாவிளான் ம.ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தனின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சசிகுமாரன், சிவனேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம், கணேசு(யாழ்.கல்வி வலயம்), ஜெகதீஸ்வரி(கனடா), பரமேஸ்வரன், சற்குணேஸ்வரி, யோகேஸ்வரி(நீர்கொழும்பு), விமலேஸ்வரி(கொழும்பு), ஜெகதீஸ்வரி (நோர்வே), சர்வேஸ்வரி(கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.2.2000) புதன்கிழமை பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்,
நீர்வேலி.
(73499)
தகவல்:
திருமதி இராசமலர் (மனைவி)

### தம்பிப்பிள்ளை நமசிவாயம்

(இளைப்பாறிய மேலதிக நிர்வாக உத்தியோகத்தர் - யாழ். கச்சேரி., முன்னாள் தலைவர், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் சுண்டுக்குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நமசிவாயம் அவர்கள் நேற்றுக் காலை(08.02.2000) காலமாகிவிட்டார்.

அன்னார் மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக்கணவரும் சண்டிகா பரமேஸ்வரியின் (ஆயுள்வேத வைத்தியர்), பிரணாநாவன்(அபிவிருத்தி உதவியாளர், திட்டமிடல் செயலகம்,யாழ். மாவட்டச்செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இலட்சுமிகாந்தன் அவர்களின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நடராசா, குமாரசுவாமி, உமையம்மை, மாணிக்கம் மற்றும் மீனாட்சி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும் மகாதேவா, மங்கயர்க்கரசி மற்றும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் மைத்துனரும் இரதிதேவி, இரவீந்திரன், இரஞ்சினி, கணேசலிங்கம், குமாரலிங்கம், நடேசமூர்த்தி, இராஜேஸ்வரி, ஜெயந்தி மகேந்திரன், சசிகரன், ரூபா, சயந்தன், ஆகியோரின் மாமனாரும் கலைச்செல்வி, பாலேந்திரன், றோசான், சிவகுமார், தேவலோசினி ஆகியோரது சிறிய தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(09.02.2000) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

32, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
(73502)
தகவல்:
ந.பிரணாநாவன் (மகன்)

### பத்மாவதி வேலாயுதபிள்ளை

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த பத்மாவதி(குஞ்சுமணி) வேலாயுதபிள்ளை நேற்று (8.02.2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா இரத்தினேஸ்வரி மற்றும் சிவசுந்தரம் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2000) நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கோண்டாவில்.
(73507)
செ.வேலாயுதபிள்ளை

### ரவீந்திரன் ரவீந்தினி (சிந்து)

(இராமகிருஷ்ண வித்தியாலய மாணவி, கொக்குவில்)

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த ரவீந்திரன் ரவீந்தினி(சிந்து) அவர்கள் செவ்வாய் அதிகாலை 3.30 மணியளவில் இறைவன் பதமானார்.

அன்னார் ரவீந்திரன் - நித்தியகுமாரி அவர்களின் பாசமிகு புதல்வியும் முத்தையாபிள்ளையின் பாசமிகு பேர்த்தியும் முத்துவேல்ராசா, சிவலிங்கராசா, செல்வலிங்கராசா, புஷ்பலிங்கராசா, முத்துராணி (பெறாமகள்), சண்முகலிங்கராசா, சாந்தலிங்கராசா, விக்கினலிங்கராசா ஆகியோரின் பாசமிகு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி
15, நந்தாவில் றோட்,
கொக்குவில் மத்தி,
கொக்குவில்.
(C/10969)
தகவல்:
மு.சாந்தலிங்கராசா (மாமனார்)

# பாடசாலை செல்லாதவர்கள்
# குடாநாட்டில் சுமார் 8 ஆயிரம் பேர்!

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். குடாநாட்டில் உள்ள பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களில் 7 ஆயிரத்து 889 பேர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை விட ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களும் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள் பாடசாலை செல்லாததுக்கும் ஒழுங்காகப் பாடசாலை செல்லாததுக்கும் பல்வேறு காரணங்கள் இருப்பதாக ஆய்வின்போது தெரியவந்துள்ளது.

குடாநாட்டின் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 246 சிறுவர்களில் 6 ஆயிரத்து 923 பேர் ஒழுங்காகப் பாடசாலை செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் காரணங்களுக்காகப் பாடசாலை செல்லாதோர் அல்லது ஒழுங்காகச் செல்லாதோர் விவரம்:

★ பொருளாதாரப் பிரச்சினை காரணத்தால் 3 ஆயிரத்து 800 பேர்.

★ சீருடை இல்லாமையால் 190 பேர்.

★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமையால் 275 பேர்.

★ அப்பியாசக் கொப்பிகள் இல்லாமையால் 336 பேர்.

★ பாடசாலைக் கல்வியை விட்டு வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் ஆயிரத்து 548 பேர்.

★ பாடசாலைக் கல்வியை விட்டபோதும் வேலை இன்றி உள்ளோர் ஆயிரத்து 740 பேர்.

★ தமது குடும்ப வேலைகளில் ஈடுபடும் சிறுவர்கள் ஆயிரத்து 357 பேர்.

★ சுகயீனமுற்ற தமது பெற்றோரைப் பராமரிக்கும் சிறுவர்கள் 92 பேர்.

★ சுகயீனம் காரணமாகப் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் 177 பேர்.

★ ஏனைய வீடுகளில் வேலை செய்யும் சிறுவர்கள் 191 பேர்.

★ விவசாய நிலங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்கள் 603 பேர்.

★ மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள் 253 பேர்.

★ கூலி வேலையில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள் ஆயிரத்து 465 பேர்.

இதேவேளை —

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாது 2 ஆயிரத்து 78 சிறுவர்கள் உள்ளனர். 6 ஆயிரத்து 587 பேர் பெற்றோரில் ஒருவரை இழந்துள்ளனர். 485 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர். 146 சிறுவர்கள் பெற்றோர்களால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

(இ-10-133)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 8 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(127354ஏ), (129043ஏ), (130593ஏ), (130659ஏ), (130659பி), (130659சி), (130766ஏ), (130783ஏ), (130784ஏ), (130784பி), (130784சி), (130784டி), (130789ஏ), (130801ஏ), (130801பி), (130824ஏ), (131607ஏ), (131718ஏ), (131775ஏ), (134381ஏ), (134381பி).

**சாவகச்சேரி**

(131585ஏ).

**யாழ்ப்பாணம்**

(128104ஏ), (128104பி), (128821ஏ), (128855ஏ), (130088ஏ), (130088பி), (130166ஏ), (130166பி), (130176ஏ), (130392ஏ), (130472ஏ), (131955ஏ), (131955பி), (131977ஏ), (132015ஏ), (132015பி), (132015சி), (132049ஏ), (132049பி), (132062ஏ), (132062பி), (132062சி), (132082 ஏ), (132116 ஏ), (132123 ஏ), (132123 பி), (132156 ஏ), (132156 பி), (132156 சி), (132161 ஏ), (132168 ஏ), (132168 பி), (132169 ஏ), (132192 ஏ), (132196 ஏ), (132196பி), (132201 ஏ), (132227ஏ), (132253 ஏ), (132326 ஏ), (133638 ஏ), (133638 பி),

**கோப்பாய்**

(128135ஏ), (128135பி), (128162ஏ), (128163ஏ), (128187ஏ), (128187பி), (128188ஏ), (128788பி), (128303ஏ), (131542ஏ), (131542பி), (131542சி), (131553ஏ), (131566ஏ), (131579ஏ), (131579பி), (133960ஏ), (133960பி), (133960சி), (134969ஏ), (134969பி).

**நல்லூர்**

(118078ஏ), (118078பி), (122899ஏ), (124352ஏ), (128081ஏ), (128081பி), (128081சி), (128086ஏ), (128086பி), (128090ஏ), (128095ஏ), (128095பி), (128096ஏ), (128097ஏ), (128097பி), (128097சி), (128302ஏ), (128308ஏ), (131574ஏ), (131574பி), (131575ஏ), (131575பி), (131575சி), (131575டி), (133251ஏ), (133252ஏ), (133266ஏ), (133266பி), (133268ஏ), (132219ஏ), (121823ஏ), (125012ஏ), (128862ஏ), (128862பி), (128862சி), (128863ஏ), (128897ஏ), (128931ஏ), (129228ஏ), (129228பி), (129484ஏ), (130600ஏ), (130686ஏ), (130713ஏ), (130771ஏ), (130794ஏ), (131617ஏ), (131657ஏ), (131755ஏ), (131755பி), (131758ஏ), (131771ஏ), (131771பி), (131814ஏ), (134696ஏ).

**பருத்தித்துறை**

(135070ஏ), (135070பி), (135070சி), (135070டி), (135070ஈ), (135070எவ்).

**சண்டிலிப்பாய்**

(128907ஏ), (128907பி), (128907சி), (129129ஏ), (129129பி), (129490ஏ), (130501ஏ), (130558ஏ), (130558பி), (130682ஏ), (130682பி), (130682சி), (130682டி), (130682ஈ), (130682எவ்), (130711ஏ), (130711பி), (130711சி), (130711டி), (130711ஈ), (130795ஏ), (130795பி), (130795சி), (131623ஏ), (131623பி), (131623சி), (131668ஏ), (131668பி), (131685ஏ), (131709ஏ), (131709பி), (131720ஏ), (134596ஏ).

**தெல்லிப்பழை**

(129190 ஏ), (129190 பி), (129190 சி), [130677 ஏ), (130760 ஏ), [131632 ஏ), (131761 ஏ), [131761 பி), (134497 ஏ), (134497 பி), (134497 சி), [134497 டி),

**உடுவில்**

(131572 பி), (131752 ஏ), (133288 ஏ), (136206 ஏ), (136206 பி), (129013 ஏ); (129055 ஏ), (129249 ஏ), (129249 பி), (129291 ஏ), (129291 பி), (130588ஏ), (130588 பி), (130588 சி), (130730 ஏ), (130756 ஏ), (130778 ஏ), (130778 பி), (130779 ஏ), (130825 ஏ) (130825பி), (131597 ஏ), (131622 ஏ), (131630ஏ), (131631 ஏ), (131633ஏ), (131640 ஏ), (131640 பி), 131666 ஏ), (131666 பி) (131666 சி), (131681 ஏ), (131681 பி), (131681 சி), (131682 ஏ), (131711 ஏ), (131712 ஏ), (131713 ஏ), (131713 பி), (131738 ஏ) (131738பி), (131750 ஏ), (131750 பி), (131750 சி), 131750 டி), (131750 ஈ), (131750 எவ்), (131778 ஏ), (137710 ஏ)

(க)

## நெடுந்தீவில் தொலைபேசி பழுது

நெடுந்தீவு பெப். 9

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைத் தொலைபேசி பழுதடைந்துள்ளதாகவும் அதனால் யாழ். செயலகத்துடன் அவசரத் தொடர்புகள் கொள்ள முடியாதிருப்பதாகவும் உதவி அரசாங்க அதிபர் நா இராமச்சந்திரன் தெரிவித்தார்.

[இ—111]

## முச்சக்கரவண்டி வழங்கல்

கொழும்புத்துறை, பெப். 9

யாழ். பிரதேச செயலாளர் பிரிவு சமூக சேவைத் திணைக்களத்தினால் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஊனமுற்றவர்களுக்கென இரு முச்சக்கரவண்டிகளும், நான்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட உள்ளன.

யாழ். பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

[இ—30]

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

கொழும்புத்துறை, பெப். 9

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ''அலங்காரம்'' என்றதலைப்பில் ஓய்வுபெற்ற அதிபரும், சித்தாந்த பண்டிதருமான சி. வேலாயுதம் உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சி. நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை இளைப்பாறிய வங்கி முகாமையாளர் சி.செ. சோமசுந்தரம் நிகழ்த்துவார்.

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(க-30)

## வாசகர் திருமுகம்

### வீதிகளின் விதியை தீர்மானிப்பவர்களுக்கு...

திருநெல்வேலி, கோண்டாவில் மக்கள் யாழ். நகரத்தின் பாடசாலைகளை அடையவும், கச்சேரியினை அடையவும் ஒரு பாலமாக விளங்கும் வைமன் வீதியின் பரிதாப நிலைபற்றி யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான மக்கள் அறிவர். நாம் இடம்பெயர்ந்து மீளத்திரும்பிய போது யாழ். மாநகர சபையினால் செப்பனிடப்பட்ட வீதி, அதன் பின்னர் மாநகரசபையினால் திரும்பியும் பார்க்கப்பட்டதே இல்லை. இத்தனைக்கும் இவ் வீதி யாழ். மாநகரசபை அலுவலகத்துக்குச் சமீபமாகவே உள்ளது.

யாழ். நகரப் பாடசாலைகளுக்குப் பயணம் செய்யும் மாணவர்கள், கச்சேரிக்குப் பணிக்குச் செல்லும் அதிகாரிகள், இவ்வீதியில் வசிக்கும் மக்கள் பயணம் செய்யும் போது ஏற்படும் பரிதாபநிலையை நேரில் பார்த்தால் சிரமம் தெரியும்,

யாழ். நகர. வீதிகளைச் செப்பஞ்செய்ய நிதி ஒதுக்கிய போது மகிழ்ந்தோம்; எமது வீதியும் திருத்தப்படும் என நினைத்து. அந்தோ பரிதாபம்! அது நிகழவில்லை. பரவாயில்லை போகட்டும். ஆனால் உங்களின் இந்த மாதத்தின் முக்கிய வேலைத் திட்டத்தில் வைமன் வீதியின் செப்பனிடுகையும் சேர்க்கப்பட வேண்டும் என்பதே இந்த வீதியில் வசிக்கும் மக்கள் உங்களிடம் விடுக்கும் மிக முக்கியமானதும் அவசரமானதுமான வேண்டுகோளாகும்.

ஜெ. தமிழன்பன்

நல்லூர்.

### பஸ் சேவை வேண்டும்

ஏழாலை மேற்கு, விளிசிட்டி, மயிலங்காடு, குராவத்தை, கொலனிப் பகுதி மக்களாகிய நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு பஸ் எடுப்பதில் பெரிதும் சிரமப்படுகின்றோம். பிரதானமாக வயோதிபர், குழந்தைகள் இந்தச் சிரமங்களைத் தாங்க இயலாதவர்களாக இருக்கின்றார்கள்.

முன்னைய பஸ் போக்குவரத்து நடைமுறையில் இதற்கான ஓர் ஒழுங்கு இருந்து வந்ததுண்டு. தெல்லிப்பழை துர்க்காதேவி கோயிலடியிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்லும் பஸ் ஒன்று மல்லாகம் சந்தியால் திரும்பி மேற்குறித்த பகுதிகளூடாக வந்து புன்னாலைக்கட்டுவன் வழியாக யாழ்ப்பாணம் போகும் ஒழுங்கு முன்னர் இருந்தது.

தற்போது கைவிடப்பட்டிருக்கும் இந்த ஒழுங்கை மீளவும் நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றோம்.

இப்பொழுது டிப்போவுக்கு வந்துள்ள புதிய பஸ்கள் நான்கில் ஒன்று இன்னும் சேவைக்கு விடப்படாதிருப்பதாக அறிகின்றோம். தயவு செய்து அந்த பஸ்ஸை எங்கள் சேவைக்கு உதவ ஏற்பாடு செய்யப்படுமானால் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்போம்.

மு. கருணாநிதி

ஏழாலை.

### ஆங்கில வகுப்பு நடத்தப்படுமா?

யாழ். பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் என்ற நான்கு வருட பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் யாழ். பாடசாலைகளில் நிலவும் சித்திர ஆசிரியர் பற்றாக்குறை தீரும். அத்தோடு மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சித்திரமும் வடிவமைப்பும் என்ற கற்கை நெறியில் ஆங்கிலமும் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. இதனால் ஆங்கில அறிவைப் பெற்றிராத மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஆகவே இனிவரும் காலங்களில்— அடுத்த கல்வி ஆண்டுக்கு சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்கள், ஏனைய பட்டப்படிப்புக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில வகுப்புக்களில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுமா? ஆங்கிலம் தொடர்பான ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழகச் சட்டத்தில் இடம் இருப்பின் அதனை உரிய முறையில் பல்கலைக்கழக சமூகம் வழி செய்து கொடுக்குமாயின் மாணவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

இந்தக் கற்கைநெறியில் சிலர் சமுகமளிக்காமல் வெற்றிடங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்பி மேலும் சிலமாணவர்களும் இக்கல்வியைத் தொடர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சி. கிருபாகரன்

புலோலி வடக்கு,
புலோலி.

## களுத்துறைச் சிறைச்சாலைச் சம்பவம்:

# சுயேச்சையான விசாரணைக் குழு நியமிக்ககோரி கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், பெப். 9

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்பட்டமை குறித்து சுயேச்சையான விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் உள்ள மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையம் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையுள்ள நாட்டின் சகல இன மக்களிடம் இருந்தும் இதற்கான கையெழுத்துகள் பெறப்பட்டு வருகின்றன.

இது இறுதியில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

இது சம்பந்தமாக மேற்படி நிலையம் விடுத்துள்ளவேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:-

★ வருங்காலங்களில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகள் தாக்கப்படாது இருப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ தாக்குதலுக்கு உள்ளாகும் கைதிகளின் குடும்பங்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கவேண்டும்.

★ இவர்களைப் பூஸாவுக்கு மாற்றக்கூடாது.

★ தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் போதிய ஆதாரம் உள்ளவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும். அவ்வாறு எந்தவித மான ஆதாரங்களும் இன்றி சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருப்பவர்கள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.


★ தாக்குதலுக்கு இலக்காகி களுத்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற கைதிகள் மேலதிக சிகிச்சைக்காக வெலிக்கடை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும்போது இடைவழியில் வைத்து அதிகாரிகளால் தாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டும்.

★ ஜனவரி 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெற்ற அனைத்துச் சம்பவங்களிலும் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் அனைவரும் விசாரணை செய்யப்பட்டு உடனடி இடமாற்றம் வழங்கப்படவேண்டும்.

★ தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்படும் செயலானது அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றது. இதே போன்று நிராயுதபாணிகளான கைதிகள் மீது சிறை அதிகாரிகள் தாக்குவது முன்பும் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(இ-9)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 — 04 — 1931

உதிர்வு 11 — 02 — 1997

### அமரர் வீ. பொ. கார்த்திகேசு (J.P.U.M.)

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

திதி: 9 – 02 – 2000

அன்பான அப்பாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

24, புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

(73456)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 25 — 12 — 1927

மறைவு: 10 — 01 — 2000

### அமரர் கார்த்திகேசு துரைராஜா

இல்லாளுடன் இனிது வாழ மாளிகைகட்டி
இல்லறம் சிறக்க புத்திரராம் அறுவரைய பெற்று
வெளிநாடு பார்த்திடவே நால்வரை அனுப்பி
பாசமுடன் உம்மருகில் இருவரை வைத்து
பன்னீராறு வயததனில் பாரினில் பரிதவிக்க
விட்டுச்சென்றீரோ!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் வேறும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

196/A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(73281)

## ஆயுள்வேத வைத்தியருக்கு இட மாற்றம்

வலி. தென்மேற்கு, பெப். 9

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பிரதேச சபைகளின் கீழ் கடமையாற்றும் 25 ஆயுள்வேத வைத்தியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ185)

## மணிக்கோபுரம்

அரியாலை, பெப். 9

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கு புதிதாக மணிக்கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ-17)

## இளவாலைப் பகுதிக்கு புதிதாக 250 கே. வி. வலு மின் பிறப்பாக்கி

இளவாலைப் பகுதியில் மின் விநியோகத்தை சீர்செய்வதற்காக 250 கே. வி. வலுக் கொண்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று அப்பகுதியில் பொருத்தபபட்டுள்ளது.

இளவாலைப் பகுதியில் இதுவரை இரண்டு சிறிய மின் பிறப்பாக்கிகள் மூலமே அப்பகுதிக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தன.

அவை சீராக இயங்காத நிலையிலேயே இளவாலைப் பொலீஸ் நிலையத்துக்கு அண்மையாக கடந்த புதன் கிழமை புதிய மின் பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

(இ—86)


## வரவேற்கின்றோம்

வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளராக இடமாற்றம் பெற்று கடமையைப்பொறுப்பேற்றிருக்கும்
எமது பெருமதிப்புக்குரிய

**திரு. வி. என். சிறிகாந்தா**

(உதவி மதுவரி ஆணையாளர்-வடபிராந்தியம் !)
அவர்களை வருக வருக என வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

**வடபிராந்திய மதுவரி கிரிக்கெட் அணி,**
யாழ். மாவட்டம்.

(73474)

## குதூகல ஆரம்பம்

அனைத்து மக்களினதும் நலன்கருதி
நாளை (10-02-2000) வியாழக்கிழமை
காலை 8.05 முதல் 9.34 மணிவரையான
சுபவேளையில்

## ரமணன் முகவர் தபாலகம்

பிரதான வீதி, பருத்தித்துறையில்

மிகவும் குதூகலமாக ஆரம்பமாகவுள்ளது
என்பதை அனைத்து நெஞ்சங்களுக்கும்
அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

உங்கள் தேவைகள்!
எம்மால் வழங்கப்படும் சேவைகள்!

- ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
- ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்,
- ராஜன் தொலைத்தொடர்பு சேவை.

Fax. No. —> 070 - 212278
070 - 212694
021 - 3248
021 - 3269
021 - 3281

உள்நாட்டு இல. & Fax No.
0094 - 70 - 212278

— உரிமையாளர்

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(சி/10953)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான
பிரமாதி வருஷம் தைத் திங்கள்
27 ஆம் நாள் (10 – 02 – 2000) வியாழக்கிழமை
காலை 6.53 மணி முதல் 8.26 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

சண்டிலிப்பாய் வடக்கு
**சண்முகம் - கனகம்மா**
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**
(பிரான்ஸ்)
அவர்களுக்கும்

அச்சுவேலி வடக்கு
**பூவிலிங்கம்- சுலோசனா**
தம்பதிகளின் புத்திரி
திருநிறை செல்வி
**சுதர்சனா**
(ஆசிரியை, யா/புத்தகலட்டி
ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கலயதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவ இடம்:-

இலக்கம் 188, 4 ஆவது தெரு, நேருநகர். சென்னை - 6000 40

♣ 2000 - 02 – 10 ஆம் திகதி அச்சுவேலி வடக்கு மணமகளின் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சண்முகம்,
இல: 188, 4 ஆவது தெரு,
நேருநகர், சென்னை.

திரு- திருமதி பூவிலிங்கம்,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

◀ இரு வீட்டார் அழைப்பு ▶

(சி/10954)

# லெபனானின் நகரங்கள் மீது இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சு

## ஹிஸ்புல்லாத் தாக்குதலின் எதிரொலி

ஜெருசலேம், பெப். 9

லெபனானில் உள்ள பல நகரங்கள் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று தீவிர குண்டுத்தாக்குதல்களை மேற் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனானில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியப் படையினர் மீது ஹிஸ்புல்லா இயக்கம் அண்மையில் பல தாக்குதல்களை நடத்தியதை அடுத்து இந்த விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய விமானங்கள் ஹிஸ்புல்லா இயக்கத்தின் வலுவான கோட்டை எனக் கருதப்படும் பால்பெக் நகரிலும் பெய்ரூட்டிலும் பல தடவைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின,

ஹிஸ்புல்லா இயக்கத்தின் இலக்குகள் மீதே இஸ்ரேல் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. எனினும் பால்பெக் நகரில் உள்ள மின் நிலையத்தை இலக்கு வைந்து பல குண்டுகள் வீசப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு லெபனானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பதிலடியாக தாமும் தாக்குதல் நடத்துவோம் என ஹிஸ்புல்லா அறிவித்துள்ளது. இதனை அடுத்து லெபனானின் எல்லைப் பகுதியில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு இஸ்ரேலியப் படையினர் கேட்டுள்ளனர்.

நேற்றைய தாக்குதல்கள் குறித்த விவரங்கள் எவையும் தெரியவரவில்லை.

(இ-6-9)

## பாகிஸ்தான் புதிய ஏவுகணை பரிசோதிப்பு

இஸ்லாமாபாத், பெப். 9

தரையில் இருந்து தரை நோக்கி ஏவப்படும் புதிய குறுந்தூர ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் பரிசோதனை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 100 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கக் கூடிய இந்த ஏவுகணை அனைத்து ரக குண்டுகளையும் காவிச் செல்லக் கூடியது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-6-9)

# ரஷ்யாவில் 5 மாடிக் கட்டடத்தில் குண்டுவெடிப்பு; 2 பேர் உயிரிழப்பு

மொஸ்கோ, பெப் 9

ரஷ்யாவின் தென்கிழக்கு நகர் ஒன்றில் நேற்று முன் தினமிரவு ஐந்துமாடிக் கட்டடம் ஒன்றில் குண்டு வெடித்ததில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

செச்சினியாவின் தலைநகர் குறோஸ்னியில் இருந்து வெளியேறிய தீவிரவாதிகள் ரஷ்ய நகரங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இந்த வேளையில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புக்கு செச்சினியத் தீவிரவாதிகளே காரணம் என்று ரஷ்யா குற்றஞ்சாட்டி உள்ளது.

அதேசமயம் — குறோஸ்னியில் இருந்து வெளியேறி மலைப்பாங்கான இடங்களில் அமைந்துள்ள தமது பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ள செச்சினிய தீவிரவாதிகள் தாம் அங்கிருந்தபடியே ரஷ்யப்படையினர் மீது கெரில்லாத் தாக்குதல் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

(இ-6)

## ரஷ்ய கப்பல் கைப்பற்றப்பட்டது

கட்டார். பெப். 8

வளைகுடாக் கடற்பகுதியில் அமெரிக்கக் கடற்படையினால் கைப்பற்றப்பட்ட ரஷ்ய எண்ணெய்க் கப்பலை ஏற்றுக்கொள்ள ஓமான் இணங்கியுள்ளது.

ஐ.நா. தடைகளை மீறி ஈராக்கிய எண்ணெயை இந்த ரஷ்யக் கப்பல் ஏற்றிச் செல்வதாகச் சந்தேகத்தின் பேரில் அமெரிக்கா அதைக் கைப்பற்றியிருந்தது.

இக் கப்பலை விடுவிக்குமாறு ரஷ்யா கோரியுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

(ஐ-க)

## பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவதற்குத் தயார்!

### ஜெனரல் முஷாரப் தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 9

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேசுவதற்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசுத் தொலைக் காட்சியான தூரதர்ஷனுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் காஷ்மீர்ப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண வேண்டும். பாகிஸ்தான் அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்தாது என்பது குறித்து எந்த உறுதிமொழியும் தர முடியாது.

இந்தியாவின் கார்கில் பகுதியில் ஊடுருவியவர்களுக்கும் பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கும் இடையிலானது என்று கூறப்படும் ஒலிப்பதிவு உரையாடல்கள் உண்மையானவையே. ஆனால் பாகிஸ்தானுக்கும் அந்த ஊடுருவலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பாகிஸ்தானில் ஜனநாயகம் எப்பொழுது ஏற்படும் என்று காலவரையறை எதனையும் வழங்க முடியாது. நாட்டின் ஜனநாயக அமைப்பிலும் அதன் உத்திகளிலும் நான் மாற்றங்களைச் செய்து வருகின்றேன்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-9)

## என்மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டப்படுகிறது

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை பெப். 9

அடுத்த வாரம் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான பிரசார சுற்றுப் பயணத்தின் போது மாணவர்கள் என்ற போர்வையில் தம் மீது தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக அ. தி. மு. க பொதுச்செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நெல்லிக்குப்பம் சட்டப் பேரவைத் தொகுதியில் நேற்று முன்தினம் தனது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்த ஜெயலலிதா அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்வாறான ஏதாவது அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றால் அதற்கு தமிழக முதல்வர் மு. கருணாநிதியே பொறுப்பு என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

தர்மபுரியில் கோயம்புத்தூர், வேளாண் பல்கலைக் கழக மாணவிகள் மூவர் எரிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து தமிழக மாணவர்கள் அ.தி.மு.க மீது ஆத்திரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்தே ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது. (இ.6-9)

## இந்தோனேசிய அதிபர் இந்தியாவுக்கு விஜயம்

இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட் 2 நாள் உத்தியோக பூர்வ விஜயமாக நேற்று இந்தியா வந்துள்ளார்.

இருநாட்டு உறவுகளையும் மேலும் பலப்படுத்துவது குறித்து இந்தோனேசிய அதிபர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்த உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங், எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தி ஆகியோரைச் சந்தித்து அப்துல் ரஹுமான் வாஹிட் பேச்சு நடத்துவார் என்றும் கூறப்பட்டது. (இ-6-9)

# ——விமானக் கடத்தல் நாடகம்——

# பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்த பேச்சுகள் தொடர்கின்றன

## லண்டன் பொலீஸார் தெரிவிப்பு

லண்டன், பெப். 9

நேற்று முன்தினம் கடத்தப்பட்ட ஆப்கானிஸ்தானின் ஹரியானா ஏயார் லைன்ஸ் விமானத்தில் பணயக் கைதிகளாக உள்ளவர்களை விடுவிப்பதற்கான பேச்சுக்கள் இன்னும் சில நாள்கள் தொடரலாம் என்று லண்டன் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது விமானத்தில் உள்ள 150 பயணிகளையும் விடுவிப்பது தொடர்பாக கடத்தல்காரர்களுடன் பொலீஸார் தொடர்ந்து பேச்சு நடத்திவருகின்றனர். என்றும்—பேச்சுக்கள் அமைதியாகவும் இயல்பாகவும் இடம் பெற்று வருகின்றன என்றும்—

விமானம் மீண்டும் லண்டனை விட்டுப் புறப்பட அனுமதிக்கப்பட மாட்டாது என்றும்— பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம்— இந்தக் கடத்தல்சம்பவத்துக்கும்தமக்கும் தொடர்பில்லை என்று ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் எதிரணிக் குழு மறுத்துள்ளதுடன் இந்தச் சம்பவத்தையும் அது கண்டித்துள்ளது.

உலக அரங்கில்

இந்த விமானக் கடத்தலை இந்தியாவும் வன்மையாகக் கண்டித்துள்ளது. விமானத்தில் பணயக் கைதிகளாக உள்ளவர்களின் நிலை குறித்தும் அது கவலை தெரிவித்துள்ளது.

இ-6-9))

## பாகிஸ்தானுக்கு ஆயுதம் கடத்த முயன்றவர் அமெரிக்காவில் கைது

நியூயோர்க், பெப். 9

பாகிஸ்தானுக்கு அமெரிக்காவில் இருந்து இராணுவ தளபாடங்களைச் சட்ட விரோதமாகக்கடத்த முயன்ற பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக அமெரிக்க பொலீஸார் அறிவித்துள்ளனர்.

தாய்லாந்தில் இருந்து அமெரிக்காவின் பொஸ்ரன் நகருக்கு வந்த ஜொனத்தன் ரெனோல்ட் என்ற இந்த நபரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் —

அமெரிக்காவில் இருந்து ரி-130 ரக போர் விமானங்கள் உட்பட பல்வேறு இராணுவ தளபாடங்களை பாகிஸ்தானுக்கு கடத்தும் நோக்கோடு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவதற்காக அவர் பொஸ்ரன் வந்ததாகவும் — பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(இ-6-9)

## ஓசோன்படலத்தில் உள்ள துளை விரிவடைவதாக எச்சரிக்கை

### பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் விடுத்தனர்

லண்டன். பெப். 9

சூரியனின் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தில் இருந்து உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக பூமியைச் சுற்றி உள்ள ஓசோன் படலத்தில் ஆட்டிக் துருவப் பகுதியின் மேற்பரப்பில் — ஏற்பட்டுள்ள துளை விரிவடைந்து அடுத்த மாதமளவில் பிரிட்டனின் வான் மண்டலம் வரை பரவிவிடக் கூடும்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இவ்வாறு எச்சரித்துள்ளனர்.

புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தில் இருந்து தப்பிப்பதற்காக பாதுகாப்பு ஆடைகளை அணியுமாறும் அவர்கள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

(இ-6-9)

## உறவு நிலையைச் சீராக்க ஆப்கானிஸ்தான் குழு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்

காபூல், பெப். 9

ஆப்கானிஸ்தானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் நோக்குடன் அந்த நாட்டு உயரதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

காபூலில் தலிபான் அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

பிரதி வெளிவிவகார அமைச்சர் அப்துல் ரஹுமான் ஷாஹிட் தலைமையிலான குழுவே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே அது ஜேர்மனிக்குச் சென்றுள்ளது. பிரான்ஸ், டென்மார்க், சுவிற்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் இந்தக் குழு விஜயம் செய்யும்.

(ஐ-6)


## எமது மண்ணில் காணாமல் போனோர் பற்றிய ஓர் ஆற்றுகை

### அக்கினிப் பெருமூச்சு

(நாடகம்)

தயாரிப்பு நெறியாள்கை;
தே. தேவானந்த்

காலம்: 12 - 02 - 2000 / 13 - 02 - 2000 நேரம் 3-30 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம்

பிரவேசம் இலவசம்

நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சி/10966)




## இறுதி ஆட்டத்துக்கு தென்ஆபிரிக்கா தகுதி!

கேப்ரவுண், பெப். 9

தென்ஆபிரிக்காவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகளுக்கு இடையிலானகிரிக்கெட் போட்டித் தொடரில் இறுதி ஆட்டத்துக்கு தென்ஆபிரிக்கா அணி தகுதி பெற்றுள்ளது.

தென்ஆபிரிக்க அணி பங்கு பற்றிய ஆறுபோட்டிகளில் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்து அணியும், ஸிம்பாப்வே அணியும் தலா இரண்டு போட்டிகளில் வென்றுள்ளன.

இன்று இங்கிலாந்து - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையில் இடம்பெற உள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

(இ-8)

## வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வலி. வடக்கு, பெப். 9

வலிகாமம் கல்விவலய,தெல்லிப்பழைக் கோட்டமட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் குளமங்கால்றோ,க.த.க.பாடசாலை ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

வசாவிளான் ம.ம.வி எதிர் யூனியன் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

வசாவிளான் ம.ம.வி. எதிர் யூனியன் கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் கல்விவலய உடுவில் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும்வலைப் பந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு மருதனார்மடம்இராமநாதன் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

உடுவில் மகளிர்கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

கந்தரோடை த. க. வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ ம.வி.

**19 வயதுப் பிரிவு**

உடுவில் மகளிர் கல்லூரி எதிர்சுன்னாகம்மயிலணிம.வி.

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்ட, சித்தன்கேணிக் கோட்டமட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக்கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி ம வி. (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்).

★ வட்டு இ. க. எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி. (வட்டு இ. க. மைதானத்தில்),

**17 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் அராலி இ. க. (யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில்).

★ அராலி சரஸ்வதி ம.வி. எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்).

★ வட்டு இ. க. எதிர் பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. (வட்டு இ.க.மைதானத்தில்).

★ சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம் எதிர் சங்கானை சைவப்பிரகாச ம. வி (வட்டு இ. க. மைதானத்தில்).

**19 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக்கல்லூரி எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்).

★ வட்டு இ. க. எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி. (வட்டு இ.க.மைதானத்தில்).

(இ-8-86-152-28)

## கரப்பந்தாட்டம்

வலி. வடக்கு, பெப். 9

வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழை கோட்டமட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2 30மணிக்கு மல்லாகம் ம. வி மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு—

**17 வயது பிரிவு**

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்

★ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் யூனியன் கல்லூரி.

**19 வயது பிரிவு**

★ யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய உடுவில் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்கு பற்ற உள்ள அணிகள் பற்றிய விவரம் வருமாறு –

**15 வயது பிரிவு**

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் உடுவில் மான்ஸ் ம.வி.

**17 வயது பிரிவு**

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இணுவில் இ. க.

**19 வயது பிரிவு**

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இணுவில் இ.க

[இ-8-86-125]

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2.15 மணிக்கு இடம்பெற உள்ள போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ கரவெட்டி தேவரையாளி இ. க. எதிர் புனித மரியாள் வித்தியாலயம் (நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில்)

★ புனித அந்தோனியார் வித்தியாலயம் எதிர் மல்லாகம் குளமங்கால் றோ. க. த. க. பாடசாலை (யாழ். இ. க. மைதானத்தில்)

★ மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் எதிர் ஹாட்லிக் கல்லூரி (யாழ். இ. க. மைதானத்தில்)

**18 வயதுப் பிரிவு**

★ கரவெட்டி தேவரையாளி இ. க. எதிர் யாழ். நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை.

(இ-8-86)

# கிராமிய வைத்தியசாலைக்கான காணிப்பிரச்சினையை தீர்க்க முயற்சி

## 9 பேர் கொண்ட குழு நியமனம்

நவாலி, பெப். 9

மானிப்பாய் தெற்கில் அமைந்துள்ள மருந்தக மகப்பேற்று நிலையத்தைத் தரமுயர்த்திக் கிராமிய வைத்தியசாலையாக நிறுவுவதில் எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்து வைத்தியசாலையை நிறுவுவதற்கான காணியை ஒரு கிழமைக்குள் பெற்றுத் தரவேண்டும் இல்லையேல் ஏற்கனவே இனங்காணப்பட்டு இலவசமாக வழங்கத் தயார் நிலையில் உள்ள காணியில் வைத்தியசாலையை நிறுவச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இவ்வாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

கிராமிய வைத்தியசாலையை நிறுவுவதற்காக மானிப்பாய் நகர்ப் பிரதேசத்தில் காணி ஒன்றைப் பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபடவென ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரச்சினைகள் சம்பந்தமாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்ற விசேட கூட்டத்தில் மானிப்பாய், ஆனைக்கோட்டை, சாவற்காடு, நவாலி போன்ற பகுதிகளில் அமைந்துள்ள 18 க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே மானிப்பாய் தெற்கில் இயங்கி வரும் மருந்தக, மகப்பேற்று நிலையத்தைத் தரமுயர்த்தி மானிப்பாய் கிராமிய வைத்தியசாலையாக இயங்க வைப்பதற்கான முயற்சிகளில் மானிப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடமிருந்து இதற்கான அனுமதியையும் பெற்றிருந்தனர்.

இவர்களின் கோரிக்கையை ஏற்று வைத்தியசாலையை நிறுவுவதற்குப் பொருத்தமான காணியை (இட வசதி) பெற்றுத் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்குச் சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

காணி பெறுவது சம்பந்தமாகக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியதோடு, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றினையும் நடத்தினர்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மானிப்பாய் சுகாதார சுற்றாடல், சமூக விவகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான இரா. வசந்தசேனன் மானிப்பாய் பிப்பிலிச் சுடலைக்கு அண்மித்ததாக உள்ள 35 பரப்புக் காணியை இனாமாகப் பெற்றுத்தர முன்வந்திருந்தார்.

மகப்பேற்று நிலையம் தற்போது அமைந்துள்ள இடத்துக்கு அண்மையில் உள்ள சில பொது அமைப்புக்கள் இதனை எதிர்த்து, மேற்படி வைத்தியசாலையை மானிப்பாய் நகர்ப் பிரதேசத்திலே நிறுவவேண்டும் எனப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இது சம்பந்தமாகப் பிரதேச செயலகத்தில் பலமுறை கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்றன.

கடந்த திங்களன்று நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் வைத்தியசாலை நிறுவவேண்டிய அவசர நிலையை விளக்கி ஒன்பது பேரைக் கொண்ட குழுஒன்றை அமைத்து ஒரு கிழமைக்குள் மானிப்பாய் நகரப் பகுதியில் போதிய காணியைப் பெற்றுத் தருமாறு பணித்துள்ளார்.

அவ்வாறு பெற்றுத்தரத் தவறும் பட்சத்தில் ஏற்கனவே இனாமாகக் காணி தரச் சம்மதித்துள்ள இடத்தில் வைத்தியசாலையை நிறுவச் சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(இ-100-152)

## பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 9

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பயிற்சி நெறித் துறையினரின் பல்வேறு விளையாட்டு அணிகளையும் உத்தியோகபூர்வமாக பதிவு செய்வதற்கு உடற்கல்வி மாணவர் மன்றம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

(இ-8)

## தொழிற் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப். 9

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அராலி - வடக்கு (வட்டுக்கோட்டை) தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள 'மின் கம்பி இணைப்பு' பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டோர் இந்தப் பயிற்சி நெறியில் சேர முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொழிற் பயிற்சி அதிகார சபையினால் இந்தப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இதேவேளை—

தொழிற் பயிற்சி அதிகார சபையினால் யாழ். மாவட்டத்தில் மேலும் பல தொழிற் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைய ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மூன்று பயிற்சி நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. (இ-க)

## கண் பரிசோதனை முகாம்களில் சேவையாற்றியமைக்குப் பாராட்டு

வலிகாமம் தெற்கு, பெப். 9

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட நான்கு இலவச கண் பரிசோதனை முகாம்களின் போது விழிவெண்படலம் பாதிப்புற்ற 101 வசதி குறைந்த வயோதிபர்களுக்கு சத்திர சிகிச்சை அளித்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் அவர்களின் சேவையை மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் பாராட்டியுள்ளனர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில், வைத்தியசாலை கூட்டுறவு சங்கத்தினருடன் இணைந்து மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் நடத்திய கண் பரிசோதனை முகாம் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய கலாநிதி எஸ். குகதாசனின் சேவையைப் பலரும் பாராட்டி உரையாற்றினர்.

அரசினர் வைத்தியசாலைகளுக்குச் சென்று தமது கண் பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய சிகிச்சைகளை பெற முடியாத வயோதிபர்களுக்கும், முதியவர்களுக்கும் வைத்திய கலாநிதி எஸ். குகதாசனின் சேவை ஒரு மகத்தான வரப்பிரசாதமாகும் எனப் பாராட்டுரை வழங்கிய மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகச் செயற்றிட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராசா தெரிவித்தார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத் தலைவர் வி. இரத்தினசிங்கம் தலைமையில் இப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாண பிரதேச ஆணையாளர் ஏ. சி. செபநாயகம், ஜி. ரி. இசற் நிறுவன பிரதிநிதி திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் மகேசன் உட்பட மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பலரும் டாக்டர்குகதாசனின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

(இ-152)

## திருக்குறள் மனனப் போட்டி

திருநெல்வேலி, பெப். 9

நல்லூர் கல்விக்கோட்டப் பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களிடையே இப் போட்டி நடத்தப்படும் என்று நல்லூர் கல்விக் கோட்ட அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

(இ-135)

## திருடிய தையல் மெசின்கள் 10 தினங்களின் பின் மீட்பு!

### வீட்டின் அருகே அநாதரவாகக் கிடந்தன

பத்துத் தினங்களுக்கு முன்னர் வீட்டுக்காரர் வீட்டில் இல்லாத வேளையில் திருடப்பட்ட பொருள்களில் இரண்டு தையல் இயந்திரங்கள் இரவோடிரவாக அந்த வீட்டின் வேலியோரம் திருடர்களால் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் கடந்த ஞாயிறன்று முகமாலை வடக்கில் இடம்பெற்றது.

கடந்த மாதம் 27ஆம் திகதி உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு வீட்டுக்காரர் சென்றிருந்த வேளையில் வீட்டின் கதவை உடைத்து வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த இரண்டு தையல் இயந்திரங்கள் உட்படப் பல பொருள்களை திருடிச் சென்றனர்.

இத் திருட்டுத் தொடர்பாக பளைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ள வேளையில் திருட்டுப் போன இரண்டு தையல் இயந்திரங்கள் மட்டும் வீட்டின் வேலியோரம் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முகமாலை வடக்கைச் சேர்ந்த அ. ஞானசிகாமணி என்பவரின் வீட்டிலேயே திருட்டு இடம்பெற்றது.

(ஐ-117)

உதயன்

## மீனவர்களின் முன்மாதிரி

நேற்று முன்தினம் யாழ். நகரில் மீனவர்கள் நடத்திய பேரணியும் அதையொட்டிய நிகழ்வுகளும் மூன்று விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளன.

யாழ். மீனவர்களின் அன்றாடப் பிரச்சினைகளை அம்பலப்படுத்துவதாக இப் பேரணி அமைந்தது முதலாவது விடயம். பேரணியை ஏற்பாடு செய்தவர்களின் நோக்கமும் அதுவே.

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பிரதேசத்திலும்—அரசியல் சாயம் ஏதுமின்றி—பொதுமக்கள் திரண்டு தாம் அடக்கப்படுவதற்கு எதிராக—அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதை ஆட்சேபித்து—பல்லாயிரக் கணக்கில் ஒன்று திரண்டு, ஒருமித்த குரலில் தமது கருத்தை வெளிப்படுத்த முடியும் என்பது நிரூபிக்கப்பட்டமை அடுத்தது.

மீனவரின் அன்றாடப் பிரச்சினைகளை முன்வைத்து அவர்களின் அமைப்புக்களினால் நடத்தப்படும் போராட்டங்களுக்கு அரசியல் கட்சிகள் தமது நோக்கங்களை எட்டுவதற்காக அரசியல் சாயம் பூசுவதைப் பொதுமக்களாகிய மீனவர்களும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் பொறுத்துக் கொள்ளமாட்டா என்பது மூன்றாவது.

அதாவது யாழ். மீனவர்கள் தாங்கள் எடுப்பார் கைப் பிள்ளைகள் அல்லர்; தமக்கு என ஒரு சுய நிலைப்பாடும், சுய உணர்வும், சுய உரிமைகளும் உள்ளன என்பதைத் தாம் பெரும் கஷ்டங்களை — நெருக்கடிகளை — அனுபவிக்கும் இந்த இக்கட்டான சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இத்தகைய தனித்துவமும், தன்மானவுணர்வுந்தான் ஈழத் தமிழர்களுக்கு பெருஞ் சொத்து. இந்த உணர்வுகளை மறந்து சமூகத்தில் சிலர் வழிபிறழலாம். ஆனால் அதற்காக ஒட்டுமொத்த சமூகமும் வழிபிறழ்ந்து அடிமைப் பட்டதாகி விடாது என்பதை யாழ். மீனவர்கள் நிரூபித்திருக்கின்றார்கள்.

கடற்றொழில் செய்வதற்கான தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக நேற்று முன் தினம் நடத்திய தமது போராட்டத்தினால் அவர்களுக்குப் பயன் கிடைக்கின்றதோ— வெற்றி கிட்டுகின்றதோ— என்பது வேறு விடயம். ஆனால் தம் ஒருமித்த குரலை அரசியல் சாயமின்றி வெளிப்படுத்தியதன் மூலம் தமது ஒற்றுமையை நிரூபிப்பதில் அவர்கள் வெற்றி கண்டுவிட்டார்கள் என்பதே நோக்கப்பட வேண்டியதாகும்.

அம்பாறையில் இரண்டு நாள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா உடனடியாக — முதற்கட்டமாக— வழங்கப்படும் என்று அரசு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. அதே போன்று, தெற்கு விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம், அந்தக் கொடுப்பனவு, இந்தக் கொடுப்பனவு என்று அள்ளிக் கொட்டுகின்றது அரசு.

ஆனால் தாம் செய்யாத தவறுக்காக அரைப்பட்டினியும் கால்பட்டினியுமாகக் கிடந்து சாகும் நமது மீனவர்களின் நிலை அரசின் கண்ணில் படவில்லை. அரசிடம் அதை சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கைகளை எடுக்கச் செய்ய வைக்கவேண்டியவர்களின் பணியும் வெறும் பேச்சோடு நிற்கின்றது. செயலில் பலன் எதனையும் தருவதாக இல்லை. இத்தகைய நிலைமை எப்போது மாறப் போகிறது?

# 600 பேர் மட்டுமே வாழும் எழுவைதீவு; கடல்,பனைவளங்கள் நிறையஉண்டு

மீன்பிடித் தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். மீன்பிடிச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீனவர் ஒருவருக்குத் தலா 7, 500 ரூபா யூ. என். எச். சி. ஆர். உதவியுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கம் நிதி உதவி வழங்கியது. ஆனால், அதனைத் திரும்பச் செலுத்தக் கூடியதாக எமக்குத் தொழில் வசதிகள் இல்லை— என்று கூறிய மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தொம்மைப்பிள்ளை, "நீங்களே பாருங்கள்! எத்தனை படகுகள் தூங்கிக் கிடப்பதை" என்றார்.

சுமார் எண்பதுக்கும் அதிகமான படகுகள் கடற்கரை மணலில் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளன. இவைகள் கடல் அலைகளைக் கிழித்தபடி தொழிலுக்குச் செல்லும் காலம் இனி எப்போது வருமோ என எல்லா மீனவர்களுமே ஏங்கிக் கிடப்பது தெரிகிறது.

எழுவை தீவில் பிரதான தொழில் மீன்பிடி. தீவின் மேற்குக் கடலில் பாரிய கடற்பன்றிகள், சுறாக்கள் நிறைந்துள்ளன. தீவின் பெரும்பாலான மக்களின் தொழிலும் மீன்பிடியே. மீனவர்கள் மிகவும் கூடிய எண்ணிக்கையில் இருப்பதால் மீன் விற்பனை மிகவும் குறைவு. கொல்லர் தெருவில் ஊசி விற்க முடியாது அல்லவா?

இங்கு நாளொன்றுக்கு சுமார் 10 கிலோ வரையான மீன்வகைகள் மட்டுமே விற்பனையாவதாகக் கவலைப்படுகிறார் சிங்கராசா. சிங்கி இறால் தாராளமாகப் பிடிபடுகிறது. 200 ரூபா முதல் 250 ரூபா வரை விற்கக் கூடிய ஒரு கிலோ சிங்கி இறாலை நாங்கள் 40 ரூபா முதல் 45 ரூபாவுக்கே வெளியிடங்களில் இருந்து வரும், வியாபாரிகளுக்குக் கொடுக்கவேண்டியுள்ளது என்கிறார் அவர். உள்ளூரில் ஒருகிலோ மீன் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஊர்காவற்றுறையில் இருந்து வரும் வியாபாரிகள் 40 ரூபா முதல் 45 ரூபாவரை மீன்களை வாங்கிச் செல்கின்றனர்.

குறிப்பிட்ட ஒரு சிலமணி நேரத்தில் ஒரு மைல் தூரத்தில் மட்டும் தொழில் செய்வதில் நமக்கென்ன பெரிய வருமானமா கிடைக்கப் போகிறது? நிவாரணம் எல்லோரையுமே சோம்பேறிகளாக்குகின்றது. எங்களுக்கு நிவாரணம் அவசியமில்லை. எங்கள் தொழிலைச் சுதந்திரமாகச் செய்யவிடவேண்டும் என்று கூறுகிறார் எமில் அருள்ராஜ். பிரசைகள் குழுவின் தலைவரான இவரின் கருத்தை; மீனவர்கள் ஆதரிக்கிறார்கள்.

### பனை வளம்

எழுவை தீவில் தட்டுப்பட்டால் ஒரு பனையுடனாகத்தான் இருக்கும். அந்த அளவுக்குப் பனைகள் ஏராளம். இரண்டு லட்சம் பனைகள் வரை உண்டு என மதிப்பிடுகிறார்கள். 2½ மைல் நீளமும் ½ மைல் அகலமும் கொண்ட அந்தச் சிறிய தீவில் இரண்டு லட்சம் பனைகளா? ஆச்சரியம் தான்!

பனைகள் அபரிமிதமாக இருக்கிறது, இருந்துமென்ன? அதன்மூலம் பெறக்கூடிய பயன்கள் எழுவைதீவுக்குக் கிட்டவில்லை. எண்ணூறுக்கும் அதிகமான பிரயோச

# கடல்நீரைக்குடிக்கும்கால்நடைகள்; விவசாயம் அங்கு அரிதான தொழில்

னத்தைத் தரும் பனையில் கடகமும் பெட்டியும் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது என்று கவலை தெரிவிக்கிறார்கள் இப் பகுதி மக்கள். பனையின் பயன்களைக் கணிசமான அளவு எமது மக்கள் பெறவேண்டுமானால் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கடாட்சம் தேவை என்கிறார் கொன்ஸ்டன்டைன். கொன்ஸ்டன்டைன் கூறியது தொடர்பாக பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் கோகுலதாசனிடம் கேட்டபோது —

எழுவைதீவில் உள்ள மாதர் சங்கம் அல்லது ஏதாவது ஒரு ஸ்தாபனம் தமக்கு பனம்பொருள் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்குமாறு பனம்பொருள் அபிவிருத்திச்சபைக்கு கடித மூலம் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

எழுவைதீவு மிகக் குறைந்த அகலம் கொண்ட தீவு என்பதால் பிரதான வீதியில் நின்றபடியே கிழக்கு, மேற்கு கடற்கரைகளைப் பார்க்கலாம். ஊர்காவற்றுறையில் இருந்து 45 நிமிட பயணத்தில் இத் தீவைச் சென்றடைய முடியும்.

### தண்ணீர்த் தட்டுப்பாடு

தண்ணீர்த்தட்டுப்பாடு மிக மிக அதிகம். முன்னர் ஊர்காவற்றுறையில் இருந்து படகு மூலம் குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது. தென் பகுதி கடற்கரையோரத்து மணலில் சிறு குழி தோண்டி அதில் இருந்து நீரை எடுத்துச் செல்கிறார்கள் சிறுமி ஒருத்தி அவ்வாறு மணலைக் கிளறி நீரெடுத்துச் செல்வதைக் காண முடிந்தது மழை காலத்தில் கிணறுகளில் இருந்து ஓரளவு தண்ணீர் பாவனைக்கு உதவக்கூடியதாகப் பெறலாம். வலப்பாட்டுமுனையில் சிறிதளவு நல்ல தண்ணீர் உண்டு.

குடி தண்ணீர்ப் பிரச்சினையை எப்படியும் தீர்க்க வேண்டும் என்பதில் எல்லோருமே ஆர்வமாக உள்ளனர். இதற்காக பங்குத்தந்தை யேசுதாசன் மழை நீரைச் சேமித்து வைக்கத்தக்கதாக பாரிய நீர்த்தொட்டி ஒன்றைப் புனித தோமையர் ஆலயத்தில் அமைத்துள்ளார். எழுவைதீவு துறைமுகப்பாலத்தைப் பார்த்தபடி அமைந்துள்ளது இந்தத் தேவாலயம்.

எதிர்காலத்தில் தேவையான நீரைச் சேமித்து மக்களுக்கு வழங்க முடியும் என்ற நம்பிக்கை அவரிடம் உண்டு. பிரசைகள் குழுத் தலைவரும் அதை ஆமோதிக்கின்றார். எழுவை தீவில் குளங்கள் இல்லை. தற்சமயம் ஒருகுளம் வெட்டப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தட்டுப்பாடுள்ள அங்கே கால்நடைகள் கடல் நீரைக் குடிக்கப் பழகிவிட்டன. குடிசனமற்ற பருத்தித்தீவில் ஆடுகள் ஏராளம்உண்டு. அவற்றின் தாகம் தீர்க்க உதவுவதும் கடல் நீரே.

### விவசாயம் கஷ்டம்

மாரிகாலத்தில் மட்டும்சிறிய அளவிலான தோட்டப் பயிர்ச் செய்கை உண்டு எனக் கூறும் உருத்திரகுமார், தன்னை ஒரு விவசாயி என்கிறார். நெல் உற்பத்திக்கான வளங்கள் இல்லாதபோதும் தோட்டப்பயிரிலேயே நாட்டமுடன் ஈடுபடுவதாகக் கூறினார்.

**உள்ளூர் வலம்**

மழைநீர் கடலுக்குச் சென்று விடுகிறது மணற்பூமி மண்ணில் பசளை கிடையாது. யூரியாவும் கிடைக்காத நிலையில் விவசாயம் இங்கு ஒரு கஷ்டமான காரியமே என்றார்.

கால்நடைகள்ஓரளவுஉண்டு. ஒரு புல்பூண்டு கூட இல்லாத நிலையில் அவற்றில் இருந்து வருமானத்தை எதிர்பார்ப்பது முடியாத காரியம்தானே என்பது அவரது வாதம்.

பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியசாலை தவிர அரசாங்க வைத்தியசாலை என்று எதுவுமில்லை. புதன்கிழமைகளில் அனலைதீவில் இருந்து வைத்திய அதிகாரி வருவதாகக் கூறும் சந்திரவதனி, இங்கு ஒரு வைத்தியசாலையை அரசு அமைக்கும் எனஎதிர்பார்க்கமுடியாதுஎன்றார். சுகாதார சேவை நிலையத்தில் பணியாற்றும் சகாயசீலி அடிக்கடிபனடோலுக்கும் பஞ்சம் வரும் என்கிறார்

இங்கு இரண்டு பாடசாலைகள் உள்ளன. முருகவேள் வித்தியாலயம், எழுவைதீவு றோ. க. தமிழ் வித்தியாலயம் இரண்டிலும் சுமார் 150 மாணவர்களும் 9 ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களைத் தவிர அரசாங்க ஊழியர் என்ற நிலையில் கிராம அலுவலர் ஒருவரும் உபதபாலதிபரும் மட்டுமே உளர்.

ஆசிரியர்கள் பெரும்பாலும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள். இத்தீவைச் சேர்ந்த ஆசிரியர் என்று செல்வி மேரியூட் கெலிஸ்ராவை மட்டுமே காணமுடிந்தது. கல்விநிலை ஒன்றும் பின்னடைவில்லை என்கிறார். ஆண்டு பதினொன்று மாணவி சுமலதா இரண்டு பாடசாலைகளையும் ஒன்றாக இணைக்கலாம் என்பதில் எவரிடத்திலும் கருத்து வேற்றுமை காணப்படவில்லை.

கல்வியில் நாட்டமுள்ள மாணவர்களுக்கு பங்குத் தந்தை வண. யேசுதாசனின் பலமான உதவியுண்டு அனேகமானவர்களை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் படிப்பதற்கு வசதிகள் அளித்துள்ளார். எழுவைதீவு மக்களின் அன்றாட வாழ்வுடன் இணைந்தவராக அவரின் பணிகள் உள்ளன.

### குடிசனம் 600

600 பேர்களைக் கொண்ட 157 குடும்பங்கள் மட்டுமே எழுவைதீவில் இப்போது வாழ்கின்றன. வடக்குப் பகுதியில் 15 குடும்பங்கள் வரையே உண்டு எனக்கூறப்பட்டது. ஏனையோர் தென் பகுதியிலேயே வசிக்கின்றனர்.

கத்தோலிக்க திருச்சபையின் படகு கடற்போக்குவரத்துக்கு உதவுகிறது. காலையில் எழுவைதீவில் இருந்து புறப்படும் படகு மாலையில் மீண்டும் அங்கு திரும்புகிறது. 10 ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது. தவிர நயினாதீவு, அனலைதீவுகளில் இருந்து வரும் படகுகளும் இங்கு தரித்துச் செல்கின்றன.

ஊர்காவற்றுறையில் இருந்து காலையில் நயினாதீவுக்குச் சேவையாற்றிவந்த 'தேவரதம்' பழுதடைந்துள்ளதால் காலையில் ஊர்காவற்றுறையில் இருந்து இங்கு பயணம் செய்ய முடியாத நிலையில் அரச ஊழியர்கள் கஸ்ரப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து காலை படகுச் சேவையை ஏற்படுத்தவேண்டும் என்பதிலும் இங்குள்ள மக்களுக்கு மின் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதிலும் பிரதேச சபைத் தலைவர் மதனராஜா அக்கறை கொண்டுள்ளதாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் கவனம் செலுத்துவதாகவும் எழுவைதீவுப் பொதுமக்கள் பலர் கூறினர்.

பலதரப்பட்ட பிரச்சினைகளை உள்வாங்கியபடி இருக்கும் மிகச் சிறிய தீவாக விளங்குகிறது எழுவைதீவு.

★

நெடுந்தீவு லக்ஸ்மன்

---

### நாளை

தை 27

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

முன்னிரவு 6.53 வரை.

நட்சத்திரம்: ரேவதி

முன்னிரவு 11.40 வரை.

சுபநேரம்: 8.04—9.34

ராகுகாலம்: 2.04 3.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

### உதய வாக்கு

முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும், அடுத்த படியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

- விவேகானந்தர்

---

### திருத்தம்

7-2-2000 உதயன் கடைசிப் பக்கத்தில் பிரசுரமாகி இருந்த ஜே.வி.பி.யின் புலமைப்பரிசில் திட்டம் - 2000 என்ற விளம்பரத்தில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் திகதிகள் 10-2-2000, 12-2-2000, 16-2-2000 என்பதே சரியானது ஆகும். 16-09-2000 என்பது தவறுதலாக 16-02-2000 என்று பிரசுரமாகிவிட்டது.

---

### கட்டுரையாளர்

உதயன் நேற்றைய (08-02-2000) இதழில் 9ஆம் பக்கத்தில் வெளியான "சங்கம் வளர்த்த அந்தணர் நிலைய மும்மொழி வித்தகர் சதாசிவஐயர்" என்ற கட்டுரையை எழுதியவர் நீர்வேலி கு. தியாகராச சர்மா ஆவார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கொத்தக்கட்டி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி பவளமணி என்பவரது தேசிய அ. அ. (இலக்கம் 0905024169 V) மானிப்பாய் சந்தைக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தயா பதிப்பகத்தில் ஒப்படைத்து உதவவும்.

(73468)

புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த பிரகலாதன் செந்தில்குமரன் என்பவரது தேசிய அ. அட்டை 28-01-2000 அன்று கொழும்புத்துறைக்கும், சுண்டுக்குளிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மாட்டின் வீதியில் அமைந்துள்ள நியூ பிறைற் கல்வி நிலையத்தில் ஒப்படைத்து உதவவும்.

(73486)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் 7-2-2000 இல் நடைபெற்ற திருமணத்தின் போது ஒரு தொகைப் பணம் பகல் 10 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பா. தர்மரத்தினம், பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(73489)

### மணமகள் தேவை

பிரான்ஸ் நாட்டு பிரஜாவுரிமை பெற்று இங்கு வந்து நிற்கும் 38 வயது, 7 இல் செவ்வாய், மக நட்சத்திரம் உடைய அழகிய மணமகனுக்கு அழகும் நற்குணமும் உள்ள மணமகள் தேவை. கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 998 மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10955)

### தென்னம் நாற்றுகள்

உடன் நடுகைக்குகந்த (குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய வத்தாவிகள் உட்பட) தென்னம் நாற்றுகளும் அத்துடன் அம்பலவி, கிளிச்சொண்டன், விலாட் மாங்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. மு. காங்கேசு, ஐயர் கடையடி, கண்டி வீதி, மீசாலை. (73430)

### மணமக்கள் தேவையா?

பதிவு இலவசம். சகல தராதரத்திலும், சகல மதத்திலும் மணமக்களைத் தேர்ந்தெடுக்க நாடவேண்டியஇடம் மோகனராணி திருமணச் சேவை, இல. 1051, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(73473)

### காணி விற்பனைக்கு

கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, 1 ஆம் கட்டை வீதியில்சாதாரண வாழ்க்கை வசதிகளுடன் அமைந்த 6 1/4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு செல்வி பொ. அருந்தவமலர், கிராம்புவில், 1 ஆம் கட்டை வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. 11.02.2000க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

(73467)

### இறைச்சிக்கோழி

புறோயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து(பாதிக்கோழிஉட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம் நியாயமானவிலைநுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை, இல: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(73484)

## நீங்கா நினைவில் நான்காண்டு



மண்ணில் 10 — 01 — 1942

மனங்களில் 22 — 02 — 1996

## அமரர் செல்லையா தர்மலிங்கம்

(நிர்வாக உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

திதி: 09-02-2000

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை''

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

''சிவபதி''
பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.

(73498)

## உலக சாரணர் தினத்தையொட்டி சாரணருக்கு பல்வேறு போட்டிகள்

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் புத்தாயிரமாண்டு உலக சாரணர் தினத்தையொட்டி குருளைச் சாரணர்களுக்கு பேச்சுப்போட்டி, கிராமிய நடனம், உருவமைத்தல், விநாடி வினாப் போட்டி என்பனவற்றையும், சாரணர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, சிகரம் அமைத்தல், விநாடிவினாப் போட்டி என்பனவற்றையும் திரிசாரணர்களுக்கு புதிர்ப் போட்டியினையும் நடத்த உள்ளது.

இப்போட்டிகள் இம்மாதம் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

உலக சாரணர் தினம் இம்மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற சாரணர்களுக்கான பரிசளிப்பும், கலை நிகழ்ச்சிகளும் அன்றைய தினம் இடம்பெறும்.

(இ-152)

பருத்தித்துறை

## தம்பசிட்டி அருள்மிகு பண்டாரி அம்மன்

வருடாந்த

## மஹோற்சவ விழா

*10-02-2000 வியாழன் பகல் 12 மணிக்கு*

கொடியேற்றவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

மஹோற்சவ குரு
சிவப்பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள்
(சாரதா பீடம், அல்லையம்பதி)

மங்கள இசை:
L. S. ஜெயநாதன் குழுவினர் ( உடுப்பிட்டி )

தினமும் இரவு 7. 00 மணிக்கு
**வில்லி பாரதம்**
என்னும் பொருள் பற்றி
சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக்குருக்கள் B. A. (Hons)
(ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
அவர்களால் சொற்பொழிவு நடத்தப்படும்.

அனைவரும் வருக, திருவருள் பெறுக.

அம்பிகையின் அருள்வழி நிற்கும்
ஸ்ரீலஸ்ரீ சபாரத்தின தேசிகர்.

(73495)

## நினைவஞ்சலி

09 - 02 - 2000

## அமரர் M. K, சுப்பிரமணியம்

(சட்டத்தரணி)

எமது கல்லூரி இடம்பெயர்ந்தகாலையில் எம் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்குக் கைகொடுத்த கல்விமான் அமரர் சட்டத்தரணி M. K. சுப்பிரமணியம் அவர்களின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் எமது கல்லூரிச் சமூகமும் நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ யாழ்ற்ரன் கல்லூரி.
காரைநகர்.

(73497)

## இதயபூர்வ அஞ்சலி

அமரர்

## குமார் பொன்னம்பலம்

அமரர் குமார் பொன்னம்பலமும் திரு. வாசுதேவ நாணயக்காரவும் யானும் கொழும்பு அக்குவைனாஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்றோம். அமரர் குமாரும் யானும் ஒரே பெறுபேறுகளைப் பெற்றோம்.

இறைவன் செயல். அவர் லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று தமிழ் மக்களுக்குப் பல வழிகளில் அரும்பணியாற்றினார். யான் 1966இல் இருந்து ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டு மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகிறேன்.

அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு எமது இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்தி, அவரது ஆத்ம சாந்திக்காக அன்னையிடம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம். இவ்வேளையில் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறைபணியில்
சுவாமி சித்ரூபானந்தா
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/10964)

## MINE ACTION ASSISTANCE GROUP
## ( MAAG ) - JAFFNA

( A co - operation between Government Agent, Jaffna and the UNOPS -- JRRP )

# VACANCIES

1. REGIONAL QUALITY ASSURANCE ADVISER:

ELIGIBILITY REQUIREMENTS:

- Good command of spoken and written English.
- Minimum of 3 Years experience of project supervision or equivalent.
- Computer literate and be familiar with MS Office application.
- Age - between 30 and 55.

2. OPERATION ASSISTANT:

ELIGIBILITY REQUIREMENTS:

- Good command of spoken and written English.
- Minimum of 3 years experience of project management or equivalent
- Computer literate and be familiar with MS Office application.
- Age - between 30 and 55.

3. LOGISTICS ASSISTANT:

ELIGIBILITY REQUIREMENTS:

- Good command of spoken and written English.
- Minimum of 3 years experience of logistical support to projects / programmes or equivalent.
- Computer literate and be familiar with MS Office application.
- Age - between 25 and 55.

Preference will be given for those who can also speak some sinhala
Send your applications to reach the Office before 15th February 2000 to

**MINE ACTION OFFICER**
SECRETARIAT, JAFFNA.

(73492)

# அரசின் தீர்வுத் திட்டத்தில் பாரதூரமான குறைபாடுகள்

## வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

இனப்பிரச்சினைக்கு அரசமைப்புச் சீர்திருத்தம் பட்டும் நிரந்தர அரசியற் தீர்வினைக் கொண்டு வந்துவிட முடியாது. அரசு முன்வைத்த தீர்வுத் திட்டத்தில் பாரதூரமான குறைபாடுகள் உள்ளன.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள்.

அவர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இருபத்தோராம் நூற்றாண்டு விடிந்துள்ள இவ்வேளையில், இலங்கையில் நிலவும் அரசியற் சூழ்நிலை மிகவும் உற்சாகமளிப்பதாகவும் நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. ஜனாதிபதி அவர்களின் துர்தமான அரசியல் நடவடிக்கைகள், எதிர்க்கட்சித் தலைவர் உறுதியளித்துள்ள ஆதரவு மற்றும் இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் காட்டி வருகின்ற அக்கறை ஆகியன அரசியற் தீர்வு மற்றும் சமாதானம் ஆகியவற்றை நோக்கி நாட்டையும் மக்களையும் மீண்டும் உற்சாகம் கொள்ள வைத்துள்ளன.

1997 இல் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளில் பாரதூரமான குறைபாடுகள் உள்ளன. சேர்க்கப்படவேண்டிய பிரதானமான பல விடயங்கள் அதில் சேர்க்கப்படாதுள்ளன. அதே போலவே, சேர்க்கப்படக்கூடாத சில விடயங்கள் அனாவசியமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை என்னாலும் ஏனைய பலராலும் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அரசாங்கம் அதனது புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முன்னரே தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் என நான் நம்புகிறேன்.

ஓர் ஒளிமயமான அரசியல் விடிவை நோக்கியபடி சொல்லொணாத் துயரங்களையும் கஷ்டங்களையும் அநுபவித்து வந்துள்ள தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே புதிய அரசமைப்பு தயாரிக்கப்படும் என்றே நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நியாயமான தமிழ் அரசியல் சக்திகளின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் ஜனாதிபதி அவர்களும் மற்றும் பொதுஜன முன்னணியின் தலைவர்களும் மிகுந்த கவனம் செலுத்துவார்கள் என நான் நம்புகிறேன். ஏனெனில் அத்தகைய சக்திகளே கடைசியில் அரசமைப்பினை தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்புக்கு உள்ளாவார்கள். நிரந்தரசமாதானமும், அரசியற் தீர்வும் இந்தத் தமிழ்க் கட்சிகள் தங்கள் சொந்த மக்களின் நம்பிக்கையை எந்தளவு தூரம் வென்றெடுக்கிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.

கடந்த எண்பது ஆண்டுகளாக வளர்ந்து வளர்ந்து வந்துள்ள இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு வெறுமனே அரசமைப்புச் சீர்திருத்தம் மட்டும் நிரந்தர அரசியற்தீர்வினைக் கொண்டு வந்து விட முடியாது ஆனால் நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் உண்மையான ஜனநாயகத்தையும், அரசியல் பொருளாதார அபிவிருத்தியையும் கட்டியெழுப்புவதற்கு அவசியமான அடித்தளமாக அமைவது அரசமைப்புச் சீர்திருத்தமே—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முதல் காலாண்டுக்கான மருந்து அடுத்த மாதமே இங்கு வரும்

திருநெல்வேலி, பெப். 9

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் அரசினர் மத்திய மருந்தகங்களுக்கும் இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் அடுத்தமாத முற்பகுதியிலேயே கொழும்பிலிருந்து இங்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாக அறியவருகிறது.

இவ்வருடத்துக்கு தேவைப்படும் மருந்துகளின் விவரங்கள் யாவும் கடந்த டிசெம்பர் மாதத்தில் யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் இங்கு வந்து சேரும்வரை மருந்துத் தட்டுப்பாடு நிலவும் அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மத்திய மருந்தகங்களுக்கும் யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் கையிருப்பிலுள்ள மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுவருவதாக யாழ். சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-135)

## சேவையில் நிரந்தரம்

நெல்லியடி, பெப். 9

பருத்தித்துறை நகர சபையில் கடந்த ஒரு வருட காலமாக, அமைய தொழிலாளராகப் பணி புரிந்த எண்மர் அண்மையில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் (இ-109)

## 71 சடலங்கள் செஞ்சிலுவை மூலம் கையளிப்பு

மட்டக்களப்பு, பெப். 9

கடந்த வருடம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பகுதிகளில் 71 சடலங்களை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரிமாறியுள்ளதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்தார்.

இதில் 65 சடலங்கள் விடுதலைப் புலிகளது என்றும் —

6 சடலங்கள் அரச படைகளினது என்றும் — அவர் தெரிவித்தார். (இ-8-7)

## இருவர் பங்குபற்றினர்

ஜனவரி 27 முதல் பெப்ரவரி முதலாம் திகதிவரை சென்னையில் நடைபெற்ற ஆசிய பசுபிக் சர்வதேச பொன்விழா சாரணர், ஜம்போறியில் காங்கேசன்துறை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் ச. செந்தில்ராஜ் (தெல்லிப்பழை, மகாஜனாக் கல்லூரி) செல்வன் ஸ்ரீ சிறிதக்சன் (இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோர் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினர் சார்பில் கலந்து கொண்டனர். (இ-152)

## குருநகர் சமூகசேவை அமைப்பு மாணவர்களுக்குப் பரிசளிப்பு

குருநகர், பெப் 9

ஜேர்மனியில் வாழும் குருநகர் மக்களின் நிதி உதவியுடன் குருநகரில் இயங்கிவரும் சமூக சேவை அமைப்பு குருநகரில் இருந்து 1998 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும், ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கும், 1999 இல் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்கி கௌரவித்தது.

இந்தப் பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிறன்று குருநகர் கலை அரங்கில் இந்த அமைப்பின் தலைவர் திருமதி யூஜின் யூலியஸ் தலைமையில் நடைபெற்றது. வைபவத்துக்கு பிரதம விருந்தினராக குருநகர் பங்குத் தந்தை அருட்திரு. பி. எவ். பொனிபஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சி. தார்சிசியஸ், குருநகர் கிராம உத்தியோகத்தர் ஆர். அன்ரனி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக நடனம், நாடகம் ஆகியவை இடம்பெற்றன. (ஐ-51)

## திருமறைக்கலாமன்றக் குழு ஐரோப்பிய நாடுகள் விஜயம்

யாழ்ப்பாணம் பெப். 9

திருமறைக் கலாமன்றத்தின் ''சாந்தி'' நடனக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கான தமது கலைப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இம்மாதம் முதலாம் திகதி ''கலைப்பாலம்—2000'' நிகழ்வினூடாக புறப்பட்ட இந்தக் குழுவினர் ஐரோப்பாவின் பல இடங்களில் தமது கலை நிகழ்வுகளை அரங்கேற்றவுள்ளனர்.

இன, மத, மொழி பேதமின்றி கலைகளினால் அனைவரையும் அணைத்து மனிதத்தைத் தேடும் பணியினை ஆற்றிவரும் இம்மன்றமானது வருடாவருடம் புலம்பெயர்ந்த ஐரோப்பிய மக்களின் உறவுகளுடன் கலைவழியில் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

மன்றத்தின் இயக்குநர் கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகளாரின் தலைமையில் சென்ற இந்த நடனக்குழுவினர் இம்மாத இறுதியில் மீளவும் நாடு திரும்பி கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் இந்தக் கலை நிகழ்ச்சிகளை மேடையேற்ற உள்ளனர். (இ)

# செய்திக் கொத்து

## சூட்டிப்பு பாதிப்பு

புன்னாலைக்கட்டுவன், பெப். 9

அறுவடைக் காலங்களில் மழை பெய்வதனால் சூடடிப்பு பாதிப்படைந்துள்ளது.

ஈரம் காரணமாக சூடடிப்பை விவசாயிகள்காலம் தாழ்த்தியே செய்ய வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-133)

## பாடசாலைகளுக்கு கணனிகள்

நெடுந்தீவு, பெப். 9

நெடுந்தீவு மகாவித்தியாலயம், றோ. க. பெண்கள் பாடசாலை ஆகியவற்றுக்கு கணனிகள் விரைவில் கிடைக்கவுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்கு கணனிகளை வழங்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார். (க-111)

## அன்பளிப்பு

தென்மராட்சி, பெப். 9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் புலமைப் பரிசில் நிதியத்துக்கு இங்கிலாந்தில் வதியும் திருமதி ச: பஞ்சலிங்கம் என்பவர் ரூபா 10 ஆயிரத்தினை கழகக் கல்விக் குழுத் தலைவர் லயன் கா. சற்குணதேவனிடம் வழங்கியுள்ளார்.

இதேவேளை—

மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த குலசிங்கம் என்பவர் சலரோகப் பரிசோதனைக்குப் பயன்படுத்தும் ஆய்வு கருவியினை கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக கழகச் செயலாளர் லயன் வீ வி. மகாலிங்கம் தெரிவித்தார். (க-117)

## கைத்தொழில் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் தெற்கு, பெப். 9

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பயிற்சித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமை சித்தியுடன் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது ஜீ. சீ. ஈ. சாதாரண தரத்திலான சித்தியை பெற்ற 16 — 25 வயதுக்கு உட்பட்டவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

செயல் பயிற்சியின்போது மூன்று மாதங்களுக்கு மட்டும் 450 ரூபாவும், சலுகைக் கட்டணத்தில் மக்கள் மயமாக்கப்பட்ட போக்குவரத்து சபையின் பருவகாலச் சீட்டுக்களும் வழங்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன் மாகாண முகாமையாளர் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, 07, கோயில் வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும். (க-152)

## நோயாளர்களது எண்ணிக்கை அதிகரிப்பு

புன்னாலைக்கட்டுவன் அரசினர் வைத்தியசாலையில் கடந்த சில நாள்களாக மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தால் தலையிடி, தடிமன், காய்ச்சல் போன்ற நோய்கள் காரணமாக பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க-133)

## முன்பள்ளி வகுப்பு

வலிகாமம் தெற்கு பெப், 9

கற்பொக்கலை கலைமகள் சனசமூகநிலையத்தின் முன்பள்ளி வகுப்புக்கள் அதன் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஒதுக்கீட்டு நிதியில் இருந்து புனரமைக்கப்பட்ட மேற்படி முன்பள்ளியில் 35 மாணவர்கள் கல்வி பெற்றுவருகின்றனர்

கலைமதி சனசமூக நிலையக் கட்டடமும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (இ-152)

## பிரிவுபசார வைபவம்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மண்டுவில் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றி நுணாவில் கிழக்குப் பிரிவுக்கு இடமாற்றல் பெற்றுச் செல்லும் திருமதி ஸ்.எ பால சுப்பிரமணியத்துக்கு மண்டுவில் பகுதி மக்களால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

இளைப்பாறிய ஆசிரியர் வே. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கலந்து கொண்ட மக்கள் காய்கறி மாலைகள அணிவித்து அவரைக் கௌரவித்தனர். (இ-117

## சமய அறிவுப்போட்டி

நல்லூர், பெப் 9

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் சமய அறிவுப் போட்டிகள் எதிர் வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நான்கு நாள்களுக்கு நடைபெறும்.

இறுதிப் போட்டிகள் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். (ஐ-103)

## வீதி திறக்க ஏற்பாடு

மாதகல் கிராமத்தின் எல்லையில் இருக்கும் கடாப்புலத்திலுள்ள பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்லும் பண்டத்தரிப்பு மற்றும் பிரான்பற்று பகுதி மக்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு பண்டத்தரிப்பு — சீரிமலை வீதியில் வயல்காணிகளுக்கு ஊடாகப் புதிய வீதி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வீதி அமைக்கப்படும் பட்சத்தில் இப்பகுதி விவசாயிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் ஏற்படும் என்றுபண்டத்தரிப்புகிராம உத்தியோகத்தர் எஸ் துரைராஜா தெரிவித்தார். (ஐ-153)

தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டியில்

# அறுவடை தாமதமடைந்தால்
# நெற்பயிர்கள் அழியும் ஆபத்து!

கொழும்புத்துறை, பெப். 9
தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டிப் பகுதிகளிலுள்ள நெல் வயல்களில் இன்னும் ஒரு வாரத்தில் அறுவடைகள் ஆரம்பிக்காது விட்டால் அங்கு விளைந்துள்ள நெல் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் 4 ஆயிரத்து 500 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இங்குள்ள மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த நிலையில் வேறு இடங்களில் வசித்து வருகிறார்கள். அவர்களினால் செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் அமோக விளைச்சலுடன் அறுவடைக்குத் தயாராகவுள்ள போதும் இப்பகுதிக்குச் சென்று அறுவடை செய்ய முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளிலுள்ள நெல்லை அறுவடை செய்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மறவன்புலோ விவசாய சம்மேளனம், தனங்களப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றினால் பக்ஸ் மூலம் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஊடாக கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள நெற்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் யாவும் முற்றிப் பருத்துள்ளதுடன் பல வயல்களில் நெற்கதிர்கள் சாய்ந்துள்ளன.

விரைவில் இந்த நெல்லை அறுவடை செய்யாது விட்டால் இங்கு விளைந்த நெல் பயனற்றுப் போய்விடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-30-5)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 154 பயனாளிகளுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ். மாவட்டத்தில் விவசாயம் மற்றும் சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் கடந்த மூன்று மாத காலத்தில் 154 பயனாளிகளுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டன.

கிராம மட்டத்திலுள்ள நிறுவனங்கள் ஊடாக 12 இலட்சத்து 88 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் நர்த்தன விவசாய சம்மேளனம், கரவெட்டி, அல்லையம்பதி, சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையம், சுன்னாகம், சனசமூக நிலையம் போன்ற அமைப்புக்களின் ஊடாக விவசாய முயற்சிகளுக்காக 107 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

துன்னாலை மாதர் அபிவிருத்திச் சங்கம், கோப்பாய் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றின் மூலம் உழைப்பாளர்களை இழந்த 27 பெண்களுக்கு சுயதொழில் கடனுதவி வழங்கப்பட்டது.

கோப்பாய் பகுதியில் இரசாயன மருந்துகள் பாவிக்காது மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளும் 20 விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவி வழங்கப்பட்டது.

வசாவிளான், மத்திய மகா வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும், வாத்தியக் கருவிகள் போன்றவையும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

(இ-5)

## கட்டாக்காலி நாய்கள்

நெடுந்தீவு, பெப். 9
அனலைதீவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

அங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் வெளியேறி விட்டதால் நாய்கள் உணவு இன்றி அலைகின்றன.

[இ—111]

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 9
வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவின் கல்விக்கண்காட்சியும் விளையாட்டு முற்றத் திறப்புவிழாவும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் வைத்தியகலாநிதி வை. தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். மாதவகுமாரும் பங்குபற்றுவர்.

விளையாட்டு முற்றத்தை அமைப்பதற்குத் தேவையான உபகரணங்களை யாழ். புறொ மோட்டோர்ஸ் நிறுவனத்தினர், ஈறோவில் நிறுவனத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் க. நாகராசா, இளைப்பாறிய ஆசிரியர் கா. செல்லையா ஆகியோர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (இ-3)

## கழுத்துப்பட்டி உள்ளூரில் தயாரிப்பு

பருத்தித்துறை, வடஇந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான கழுத்துப் பட்டி உள்ளூரில் தயாரித்து வழங்கப்படுகிறது.

துன்னாலை, சனசமூக நிலைய நெசவு நிலையத்தில் கழுத்துப் பட்டிக்கான துணி நெசவு செய்யப்பட்டு, வியாபாரி மூலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் கழுத்துப் பட்டியை தைத்து, கல்லூரிக்கு விநியோகம் செய்து வருகிறது.

இது வரை காலமும் இக்கல்லூரி மாணவிகளுக்கான கழுத்துப் பட்டி கொழும்பிலிருந்தே பெறப்பட்டு வந்தது.

(இ-173)

## ரெலோ அமைப்புக் கோரிக்கை

தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட நெல்லை அறுவடை செய்வதற்கு விவசாயிகளை அனுமதிப்பதுடன் அப்பகுதி மீனவர்களையும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலை இயக்க யாழ். மாவட்ட பொறுப்பாளர் என். கே. விந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து யுத்த சூழ் நிலை காரணமாக சுமார் 850 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. தற்பொழுது இங்கு அமைதி நிலவுவதால் இந்த மக்களை மீளக்குடியமர்த்திப் பயிர்களை அறுவடை செய்ய அனுமதிப்பதுடன் அப்பகுதி மீனவர்களையும் தொழில் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று அரசைக் கோருகின்றோம்,

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-9)

## தரம் 10 மற்றும் 11 வகுப்புகளுக்கு நாடகமும் அரங்கியலும் ஒருபாடம்

தரம் 10 மற்றும் தரம் 11 வகுப்புக்களுக்குரிய கவின் கலைப் பாடங்களில் ஒன்றாக ''நாடகமும் அரங்கியலும்'' இந்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக சமய கலாசார அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி கவின் கலைப் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கு நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை இந்த வருடம் முதல் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்காகவும் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 10 மற்றும் தரம் 11 வகுப்புக்களுக்கு அறிமுகம் செய்வதற்கான அனுமதியை கல்வி, உயர்கல்வி அமைச்சு ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் —

அதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வி நிறுவகம் பாடத்திட்டங்களைத் தயாரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ''நாடகமும் அரங்கியலும்'' ஏற்கனவே ஒரு பாடமாக இருந்து வருவது தெரிந்ததே. (இ-6)

## தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் யாழ். நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், பெப் 9
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைத் தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினம் சிவகுமார் என்ற இளைஞரே மாவட்ட நீதிபதி இ. த. விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவராவார்.

நீதிவான் முன்னிலையில் இந்த இளைஞர் சாட்சியம் அளிக்கையில், தான் ஊரெழு முகாம் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அங்கு வைத்துக் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், தனது தலை முடி மற்றும் நெஞ்சு உரோமம் பிடுங்கப்பட்டு தான் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தன்னைப் பார்வையிட வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் தான் தாக்கப்பட்டது குறித்து முறையிட்டதாகவும் அவர் கூறினார்.

ஊரெழு முகாமிலிருந்து காங்கேசன்துறைத் தடை முகாமுக்கு அனுப்பப்பட்ட பின்னர் அங்கு வைத்துத் தனது காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும்—

எனினும் தற்போதும் தமது உடலின் பல பகுதிகளிலும் நோவு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபரை உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும்—

யாழ். போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனை அறிக்கையுடன் சந்தேக நபரைப் பெப்ரவரி 21 ஆம் திகதியன்று நீதி மன்றில் ஆஜர் செய்யுமாறும்—

நீதிவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (இ—9)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**குமாரசாமி கலைவாணி**

அன்னை மடியில் 08—11—1959
இறைவன் அடியில் 07—02—1992

திதி: 09—02—2000 சதுர்த்தி

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
இறையடி சேர்ந்து ஆண்டு எட்டு
சென்றாலும் உன் நினைவலைகள்
எம்மை விட்டகலாது!
ஓம் சாந்தி!

என்றும் எம் உள்ளத்தில்
அம்மா, அப்பா,
சகோதர, சகோதரிகள்.

தாழையம்பதி வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(சி/10960)

A GURANTEED PRODUCT
FROM LANKA NIPPON
KOBE
ANTENNA
BOOSTER
NO:1
SELLER IN SRI LANKA
AVAILABLE ISLANDWIDE
ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE
LANKA NIPPON
18. KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726. 437735 FAX: 437736

(சி/10805)

# மீன்பிடித்தடையை நீக்கக் கோரி கையெழுத்து இயக்கம் ஆரம்பம்

குடாக்கடலில் விதிக்கப்பட்டுள்ள மீன்பிடித்தடையை உடனடியாக நீக்கி பட்டினியால் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு உதவுமாறு ஜனாதிபதியைக் கோருமுகமாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கையெழுத்து இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தம் பகுதிகளிலுள்ள அங்கத்துவ கடற்றொழிலாளர்களிடமிருந்து கையெழுத்துகளைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் -

கையெழுத்துகள் அடங்கிய மகஜர் ஒன்று வெகுவிரைவில் யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் -

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் ரீ.தவரெட்ணம் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் -

அதுவரை தமது போராட்டங்களைத் தொடரப் போவதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை - கடந்த திங்கட்கிழமை ஆயிரக்கணக்கான மீனவர்கள் ஒன்று திரண்டு குடாக்கடலில் மீன்பிடித் தடையை நீக்கக்கோரி மாபெரும் பேரணி ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# காரைநகர் தபாலகம் விரைவில் திருத்தப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.9

வன்செயல்களினால் சேதமடைந்த காரைநகர் தபால் நிலைய திருத்தவேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் தபாலகத்தை திருத்தம் செய்வதற்கென தபால் திணைக்களத்தினால் 13லட்சம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

திருத்த வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்த தபாலகத்துக்கு கட்டடத் திணைக்கள பொறியியலாளர் குழு ஒன்று அண்மையில் விஜயம் செய்து சேத விவரங்களை மதிப்பீடு செய்துள்ளது. (ஐ-5)

# வல்வை ஆஸ்பத்திரியிலும் பிரெஞ்சு மருத்துவ சேவை

## பெற்றுக் கொள்ள முயற்சி

நெல்லியடி,பெப்.9

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் பிரெஞ்சு மருத்துவக் குழுவினரை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்ட சத்திர சிகிச்சைக்கூடம் திறந்து வைக்கப்படவிருப்பதை அடுத்தே வாரத்தில் இருநாள்களில் இங்கு சத்திர சிகிச்சைகளை பிரெஞ்சு மருத்துவக் குழுவினர் மூலம் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மேற்கொண்டு வருகின்றார். (ஐ-109)

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் சிக்கினார்

வடமராட்சிப் பகுதியிலுள்ள வீடொன்றை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கிருந்து கஞ்சா செடிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

புலோலி சக்தி கோவிலடியிலுள்ள ஒரு வீட்டிலேயே கடந்த 6ஆம் திகதி பருத்தித்துறை பொலீஸார் சோதனை செய்த சமயம், அங்கு சட்டவிரோதமான வகையில் பயிரிடப்பட்டிருந்த மூன்று கஞ்சா செடிகளை கண்டுபிடித்தனர்.

குறித்த சந்தேக நபரை பொலீஸார் நேற்றுமுன்தினம் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் இக் குற்றத்திற்காக இவரை ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

## பிற்போடப்பட்டுள்ளது

எமது மன்றத்தினால் இன்று (09.02.2000) நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 29.02.2000 அன்று குலுக்கல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (73503)

## ஓவியக்கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண ஓவியர்களின் ஆக்கங்களை அகில இலங்கை ரீதியில் அறிமுகப்படுத்துப்படுவதோடு இலங்கைக்கு வெளியில் அறிமுகம் செய்வதுடன் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கமாகவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொழும்பில் ஓவியக் கண்காட்சியை நடத்த எமது அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இக்கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள், சித்திர ஆசிரியர்கள், இத்துறை சார் ஓவியர்கள் பங்குபற்றலாம். இதில் கலந்து கொள்வோருக்குரிய அறிவுறுத்தல் சம்பந்தமான விவரங்களை உங்கள் பிரதேசக் கல்விப் பணிமனையில் உள்ள சித்திரக்கல்வி உதவிப் பணிப்பாளர், சித்திரக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆகியோரிடம் பெற்றுக் கொள்வதுடன் உங்களது ஆக்கங்களை பெப்ரவரி 29ஆம் திகதிக்கு முன்பாக அவர்களிடம் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(C10968)

---


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத்திங்கள் 27 ஆம் நாள் (10-02-2000) வியாழக்கிழமை காலை 7.29 மணி முதல் 9.05 மணிவரை அமைந்துள்ள கும்பலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறைசெல்வன்
**ஸ்ரீகரன் B. Com.**
அவர்களுக்கும்



எமது ஏக புதல்வி
திருநிறைசெல்வி
**துயராஜினி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி த. பரராசசிங்கம்
15, 9ஆவது லேன், வாசல றோட்,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு - 13. Tel: 435329
யாழ்ப்பாண வணிக நிலையம்.

திருமதி ம. சௌந்தரராசா
சௌ. தயாபரன்
(சகோதரன்)
7-1/10, உம்பிச்சி பிளேஸ்,
கொழும்பு - 13

(இருவீட்டார் அழைப்பு)

(73475)

---


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருஷம் தைத் திங்கள் 27 ஆம் நாள் (10-02-2000) வியாழக்கிழமை காலை 6.53 மணி முதல் 8.26 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய கும்பலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**மதிவதனன்**
(ஆசிரியர் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**மாலாதேவி**
(கிராம உத்தியோகத்தர், அளவெட்டி மேற்கு)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகன் இல்லத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லம் 11-02-2000 வெள்ளி பிற்பகல் 3.00 மணி
மணமகள் இல்லம் 12-02-2000 சனி பிற்பகல் 3.00 மணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி ச. சுப்பிரமணியம்
செட்டிச்சோலை
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

திரு. திருமதி மு. சேனாதிராஜா
மங்குளியன் வளவு,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தனித்தனி அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.
(இரு வீட்டார் அழைப்பு)

(C/10962)

---


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத் திங்கள் 26ஆம் நாள் (09.02.2000) புதன்கிழமை காலை மணி 9.35 முதல் 11.05 மணிவரையுள்ள உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய மேடலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**தர்மசீலன்**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**ரோகினி**
அவர்களுக்கும்

திருமணம் செய்து வைக்க எல்லாம்வல்ல இறைவன் கிருபையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று சென்னை 'ஹோட்டல் செல்டர் மண்டபத்தில்' திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து; அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி தம்பையா தர்மலிங்கம்
'செல்வஸ்தான்'
இணுவில் தெற்கு,
இணுவில் - சுன்னாகம்.

திரு. திருமதி தம்பிராஜா ரத்தினசாமி
இணுவில் தெற்கு,
இணுவில் - சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(C/10970)

# இராணுவத்துக்கு இளைஞரைச் சேர்க்க அரச அதிபர்களின் ஒத்துழைப்புத் தேவை!

## படை அதிகாரி கோருகிறார்

இளைஞர் - யுவதிகள் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு அரசாங்க அதிபர்கள் தம்மால் இயன்ற முழுமையான உதவிகளையும் வழங்கவேண்டும் என இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல சகல அரசாங்க அதிபர்களையும் கோரியுள்ளார்.

கடந்த திங்களன்று கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டிலேயே லயனல் பலகல்ல இந்த கோரிக்கையை விடுத்தார்.

பாடசாலைக்கல்வியை முடித்துக் கொண்டு மாவட்டம் தோறும் வேலையற்றிருக்கும் இளைஞர் - யுவதிகளை இராணுவத்தில் இணைய அரசாங்க அதிபர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

இலங்கை இராணுவம் வைபவங்களில் மட்டும் கலந்துகொள்ளும் இராணுவமாக அல்லாமல் போர் ஆற்றல்மிக்க, தொழில்சார் இராணுவமாக முழு அளவில் மாறியுள்ளது. அத்துடன் ஈடுபாட்டுடன் உழைக்கும் மிகச் சிறந்த இராணுவமாகவும் இலங்கை இராணுவம் விளங்குகின்றது.

நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் இலங்கை இராணுவம் கணிசமான பங்கு வகித்திருக்கிறது. அண்மையில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை நிவர்த்தி செய்து, இராணுவத்தை நவீனப்படுத்துவதற்கு தற்போதைய ஆள்சேர்ப்பு அவசியமாக உள்ளது.

அமெரிக்காவில் கூட இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பது கஷ்டமாக உள்ளது என அந்த நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் எஸ். ஹோகன் அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இராணுவத்தினர் காத்மண்டுவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைப் பிரிவில் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர்.

எனவே எமது இராணுவத்தின் மகிமைகளை எடுத்துக் கூறி இளைஞர் இராணுவத்தில் சேர அரசாங்க அதிபர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். இதன் முன்னேற்பாடாக மாவட்ட மட்டத்தில் திட்டங்களை ஆரம்பித்து வேலையற்றிருக்கும் இளைஞர் - யுவதிகளின் விவரங்கள் முதலில் திரட்டப்பட வேண்டும். அத்துடன் அவற்றின் பிரதிகளை இராணுவத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அரசாங்க அதிபர்களிடம் கேட்கப்படுகிறது.

இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்ப்பது தொடர்பான ஆவணங்கள் பலவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டன. எனினும் வடபகுதி அரசாங்க அதிபர்கள் எவருக்கும் இந்த ஆவணங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

## தேடுதல்

வவுனியா குஞ்சுக்குளப் பகுதி நேற்றுமுன்தினம் காலை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. இந்தத்தேடுதலின் போது 190 தமிழர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ-க-3-8)

## பிராந்திய சபைகள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரிமாளிகையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அதன் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோரும் -

ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அதன் ஆலோசகர்களான டாக்டர் விக்கினேஸ்வரன், எஸ்.தவராசா (எம்.பி) ஆகியோரும் -

புளொட் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், செயலாளர் சதானந்தன் ஆகியோரும் -

ரெலோவின் சார்பில் அதன் முதல்வர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் ஆகியோரும் -

பங்குபற்றினர்.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளும், அமைச்சர்களும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

1997ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுயோசனைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைக் கொண்ட புதிய யோசனைகள் தமிழ்க்கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரிக்கமுடியாத பிராந்திய சபைகள் தொடர்பாக முதலில் கலந்துரையாடப்பட்டது. அந்தச் சபைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள சொற்பதங்கள் ஒற்றையாட்சியைக் குறிப்பதாக உள்ளன என்று தமிழ்க் கட்சிகள் ஆட்சேபம் தெரிவித்தன.

'பிரிக்கமுடியாத பிராந்தியங்களின் கூட்டமைப்பான இலங்கை இறைமையுடனும், சுதந்திரமாகவும் திகழும்' என்ற மாற்றத்துடன் பின்னர் அது ஏற்கப்பட்டது.

பல்லின, பல்மத நாடாக இலங்கை திகழும் என்ற கோட்பாடு விடயம் 53ஆவது பிரிவில் சேர்க்கப்படும் என்று அரச யோசனையில் தெரிவித்திருந்தது.

53ஆவது பிரிவு சட்டவரைவு அந்த பிரிவாக இருப்பதால், மீறல்கள் தொடர்பாக நீதிமன்றம் செல்ல முடியாதநிலை உள்ளதாகவும் சட்ட வலுவுள்ள ஆறாவது பிரிவுக்கு அதை மாற்றவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.

அதனை ஏற்று அரசமைப்பில் சேர்ப்பதாக உறுதி தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய சபைகளுக்கு ஆளுநர்களை நியமிக்கும் போது பிரதமரின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆளுநர் நியமனத்தில் அந்தப் பிராந்திய சபையின் முதலமைச்சரின் ஆலோசனை பெறப்படவேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கோரிக்கை விட்டன.

இந்த மாற்றத்தை ஏற்கமுடியாது என்றும் -

இது விடயமாக எழுத்து மூலமான ஆட்சேபனை சமர்ப்பித்தால் பின்னர் ஆராயலாம் என்றும் -

அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாப்புமுன்னுரை, கொழும்பு நகரின் சுயாதிபத்தியம், அடிப்படை உரிமைகள், தேர்தல் ஆணையாளர் நியமனம் தொடர்பான விடயங்களில் தமிழ்க்கட்சிகள் தெரிவித்த ஆட்சேபனைகள் தொடர்பாக தனித்தனியாக எழுத்து மூலமாக விளக்கம் தருமாறு தமிழ்க்கட்சிகள் கேட்கப்பட்டுள்ளன.

தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்புக்கள் நாளையும், எதிர்வரும் 15ஆம், 22ஆம் திகதியும் மீண்டும் நடைபெறவிருக்கின்றன என்றும் -

அச்சமயமே வடக்கு - கிழக்கு இணைப்பு, காணிப்பங்கீடு ஆகிய முக்கிய விடயங்கள் ஆராயப்படும் என்றும் -

தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-8)

## மட்டு.பாஸ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்கள் வெளியிடங்களுக்குச்செல்ல'பாஸ்' பெறவேண்டும்என்ற புதிய நடைமுறையை அரசு அமுல் செய்து மக்களை துன்பத்தில் தள்ள முனைகின்றது என்றும் -அக்கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறும் அவசரகாலச் சட்டநீடிப்பு பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என்றும் ஐ.தே.க. முடிவு செய்துள்ளது. (ஐ-3-க).

## நேற்றிரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவன், தனது பொதி ஒன்றினை சீற்றின்மேல் வைத்துவிட்டு அருகில் இருந்தோரிடம் அதனைப் பாதுகாக்குமாறு கேட்டுவிட்டு பஸ்ஸை விட்டு இறங்கிய சில நிமிட நேரத்தில் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து புறக்கோட்டைப் பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் தீவிர சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து புறக்கோட்டையில் இருந்து தூர இடங்களுக்கான போக்குவரத்துக்கள் நேற்றிரவு தடைப்பட்டிருந்தன.

அடுத்த குண்டு கொழும்பில் இருந்து நீர்கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் வெடித்தது. ஜா-எல பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. இதில் 20 பயணிகள் வரை காயமடைந்ததாக நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இவ்விரு சம்பவங்களுடன் சேர்த்து கடந்த ஒருவார காலத்தில் மட்டும் தெற்கில் எட்டுக் குண்டு வெடிப்புக்கள் பஸ்களில் இடம்பெற்றுள்ளன. (ஐ-7-21)

## மாற்றியமைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களில் இரு விடயங்கள் தவிர்ந்த ஏனைய சிறிய விடயங்களாக இருந்த போதும் அவற்றில் முரண்பாடுகள் பலவுள்ளன.

தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் அடுத்த சந்திப்புக்களில் ஆராயப்படவிருக்கின்றன. சிறு சிறு விடயங்கள் குறித்து இணக்கம் காண்பதிலேயே இழுபறி நிலவும் போது முக்கிய பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் எப்படி அமையப்போகின்றன என்பது அடுத்து வரும் நாள்களில்தான் தெரியும்- இவ்வாறு அந்த வட்டாரங்கள் சலித்துக்கொண்டன. (அ-3)

## மக்கள் வருகை

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் நேற்று பிரமணாளங்குளம் ஊடாக வவுனியா வந்து சேர்ந்தனர்.

## ஈ.பி.டி.பியில் இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று சரண் அடைந்தனர்.

இவர்கள் இருவரையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தார்.

91ஆம் ஆண்டு மேசன் வேலைக்காக தங்களை தீவுப்பகுதிக்கு அழைத்து வந்தவர்கள் தமக்கு ஆயுதப் பயிற்சி வழங்கினர். அதன்பின் தம்மை தமது வீட்டுக்கு செல்ல இதுவரை அனுமதிக்கவில்லை என்றும் - வீட்டுக்குச் செல்ல நீதிமன்றம் உதவ வேண்டும் என்றும் -

அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதுவிடயத்தில் நீதிமன்றம் எந்த வகையில் உதவ வேண்டும் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது.

தமக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதால் தம்மை திருமலையில் விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இருவரும் கோரினர்.

இதையடுத்து அவர்களை யாழ். நீதிமன்றத்தில் தடுத்து வைத்து, திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## முல்லைக் கடலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னோர் சேதமடைந்த உபகரணங்களை மீட்டுக்கொண்டு கரை திரும்பியதாகவும் ஆனால் வள்ளங்களில் சென்ற இரு மீனவர்கள் மட்டும் கரை திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவர்களைத் தேடும் பணியில் மீனவர்கள் நேற்றுக்காலை முதல் ஈடுபட்டனர் என்று சொல்லப்படுகிறது.

• இதேவேளை - முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு கடற்படையினர் விடுதலைப் புலிகளின் இரு படகுகளைத் தாக்கி மூழ்கடித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

வடக்கே சேவையில் ஈடுபடும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கச் சென்ற கடற்படையினரே புலிகளின் படகுகளை இனங்கண்டு தாக்கி மூழ்கடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-8)


**புதிய வீடியோ CD வெளியீடுகள்**

**சாய்குமார், செளந்தர்யா** நடித்த

* **நாகதேவதை**
* **குட்லக்**

திரையரங்குக்கு முன்னுரிமை

**ரஜனி** நடித்த

* **ராணுவ வீரன்(CD)**

**விஷ்ணு வீடியோ,**
K.K.S. Rd,
கோண்டாவில்.
(73510)



**பொருளியற் கல்லூரி**
யாழ்ப்பாணம்.

**A/L 99 DAY**

நாடகமும் அரங்கியலும்
ஆசிரியர் **நிஷாந்தன்**
**மீட்டல் வினா - விடை**
திங்கள் – வெள்ளி
1.30 - 3.00 p.m.
(73512)



**A/L 2001**
**அளவையியல்**
R.P. சர்மா
குறியீட்டு
அளவையியல்

* **சனி – ஞாயிறு:– 12 – 1**
**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி- யாழ்ப்பாணம

* **சனி – ஞாயிறு:– 7 – 8**
**பொருளியற் கல்லூரி**
(கிளை நிறுவனம்)
கே.கே.எஸ். றோட் -
இணுவில்

* **திங்கள் – வெள்ளி:– 4 – 5**
**BARATHY**
சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனத்திலும் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
(73511) **DIRECTOR**



**மீண்டும் ஆரம்பம்!**

**டீசல் வாகன பாவனையாளர்களுக்கு**

**டீசல் பம், நொசல்ஸ் வேலைகளுக்கு பெயர்பெற்ற**

**றொனி டீசல்ஸ்**

**இல.5, புறாடி முன்ஒழுங்கை, கண்டிவீதி, அரியாலை (கச்சேரியடி)யில் இயங்கி வந்த எமது கராஜ் தற்போது இல.75, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்) என்ற முகவரியில் மீண்டும் இன்று (09-02-2000) புதன்கிழமை முதல் ஆரம்பமாகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**றொனி டீசல்ஸ்,**
இல.75, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

துரைராசா றொலின்டன்
(உரிமையாளர்)
(73496)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 01 - 1924

உதிர்வு 21 - 01 - 1999

**திருமதி தளையசிங்கம் கனகம்மா**

**திதி :– 09–02–2000 (புதன்)**

ஓராண்டு சென்றதம்மா – உங்கள்
இனிய உறவை நாமிழந்து
வாடுகின்றோம் உங்கள் நினைவால்
வந்திடுவீர்கள் மீண்டும் எம் கண் முன்னே.

122/4 பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
சகோதரர்கள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(C/10971)


NEW SCIENCE COLLEGE
யாழ்ப்பாணம்.
**பெளதிகவியல்**

**காந்தப்புலம்**
புதன் 3 – 5
09.02.2000

இலத்திரனியல்
சனி, ஞாயிறு 11 – 12
ஆரம்பம்:– 12.02.2000

(73478) **திரு. சம்பந்தன்**


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.